# சாயி மகராஜ் குருவை தேடி
# SAI MAHARAJ GURUVAI THEDI


ஆண்டு: 5 | இதழ்: 03 | ஆகஸ்ட் - 2023 | விலை - ரூ.15/-

VOL:5 | ISSUE: 03 | AUGUST - 2023 | Rs. 15/-


6 ஆம் ஆண்டு சிறப்பிதழ்!





## சாச்சு என்ற "சிவனி சார்"

# சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

**அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!**

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி எண்: 88258 31068.**

**தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே**

**பணம் அனுப்பவேண்டிய முகவரி:**

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

**G- PAY, PHONE PAY, NO: 99418 16692**

# சாயி மகராஜ் குருவை தேடி
# SAI MAHARAJ GURUVAI THEDI

**ஆண்டு-5 மலர்-03 ஆகஸ்ட்- 2023**

வெளியிடுபவர் / ஆசிரியர்

**V.ஸ்ரீராம்**

கௌரவ ஆசிரியர்

**திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்**

விளம்பர பிரிவு

**திரு.T. கார்த்திகேயன்,** கோவை

கௌரவ ஆலோசகர்கள்

**திருமதி. S.சாந்தி,** சென்னை.

**திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி,** சென்னை.

**திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.**

**திரு. B.முருகன்,** சோழவந்தான்.

**டாக்டர் செல்வி. S.சௌம்யா,** ஊட்டி

இதழ் வடிவமைப்பு

**சிகரம் பப்ளிகேஷன், 98400 83174**

**உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**V.ஸ்ரீராம்**

**எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.**

**செல்: 99418 16692,88258 31068.**



கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.




**அன்புக் குழந்தையே...**

யார் உனக்கு துன்பத்தைக் கொடுத் தாரோ, அவர் இன்றைக்கு நன்றாக இருப்பதை போன்ற தோற்றம் உனக்குத் தெரியும். கெட்டதை செய்கிற அனைவரும் நன்றாக இருக்கிறார்கள், நல்லதையே செய்கிற நான் ஏன் கஷ்டபடுகிறேன் எனக் கவலைபடாதே!

அவர்கள் காலையில் பூத்து மாலையில் வாடும் பூவை போன்றவர்கள், இப்போது உள்ள நிலையிலிருந்து விரைந்து கீழே தள்ளப்படுவார்கள்.

ஆனால் நீயோ விருட்சத்தை போன்று ஆழ வேரூன்றி நிற்பாய். அநேகம் பேர் உன்னை ஏமாற்ற வந்தாலும் அயர்ந்து போகாதே!

நாம் இன்று கஷ்டப்படுவதைப் போலத் தான் நம் எதிரில் இருப்பவரும் ஒருநாள் துன்பத்தை அனுபவிக்கப் போகிறார் என்பது உனக்கு தெரிந்துவிட்டால், நிச்சயமாக அவர்கள் மீது கோபப்பட மாட்டாய், அவர்களுக்காக நிச்சயம் நீ பரிதாபப்படுவாய். இன்று நான், நாளை நீ என்று சொல்லிக் கொள்வாய்.

உனக்குத் தவறு இழைத்தவரை பார்க்கும் போது, இவரும் தண்டனைக்கு தயாராகிறார் என்பதை தெளிவாக தெரிந்து அவருக்காக பரிதாபப்படு. எந்த சூழ்நிலையிலும் நீ பாதிக்கப்படமாட்டாய். ஏனெனில் உனக்கு துணையாக இருக்கின்ற நான் உன்னை உயர்த்தி அழகு பார்ப்பேன்.

**- பகவான் ஸ்ரீ சாயிபாபா**

**ஆசிரியர் பக்கம்...**



# அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

**ப**கவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து ஒன்றாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

வழக்கம்போல் காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் ஆரம்பித்த விழா, தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு புத்தக வெளியீட்டு விழா தொடங்கியது

இம்மாத இதழை "ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா வேத ஒலி டிரஸ்ட்" அமைப் பாளர் திருமதி.கொரட்டூர் புவனா அவர்கள் வெளியிட, ஊரப்பாக்கம் பாபா பக்தை திருமதி. குமாரி செல்வ ராஜ் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில், பாராயணப்பகலவன் திரு.சுந்தர்சாய், திரு.பாலாஜி, திருமதி. மாதங்கி பாலாஜி, திரு.அகஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்த னர். விழாவில் கலந்து கொண்ட பக்தர் களுக்கு சாய் தியானா லயா சார்பில் அன்னபிரசாதம் அளிக்கப் பட்டது. புத்தக வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக் கும் இடம் தேடிச்சென்று அன்னதானம்






வழங்கப்பட்டது.

மேலும் நமது இதழுக்கு, குடந்தை சபரிநாதன் அவர்கள் ஒரு வருட சந்தாதாரர்கள் ஐவரையும், தென்காசி சிவகுரு அவர்கள் மூன்று வருட சந்தாதாரர்கள் இருவரையும், ஒரு வருட சந்தாதாரர்கள் இருவரையும், இணைத்து சாயி சேவை செய்துள்ளார்கள்.

மேலும் நமது இதழுக்கு குறைந்தது 1008 சந்தாதாரர்களையாவது இணைத்தே தீருவேன் என்ற லட்சியத் துடன் தொடர்ந்து சந்தாதாரர்களை இணைத்துக் கொண்டிருக்கும் திரு நின்றவூர் "பகவான்நாமதாசன்" திரு. முரளி சாய்ராம் அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும் நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வள முடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கின்றோம்.

இம்மாத இதழ் பகவான் சாயிநாதரின் ஆசீர்வாதத்தால் 61 வது



மலராகவும் 6 ஆம் ஆண்டு துவக்க விழா மலராகவும் மலர்ந்திருக்கிறது. தொடர்ந்து எங்களுக்கு நல்லாதரவை கொடுத்துக் கொண்டிருக்கும் சாயிநாத ரின் பக்தர்களுக்கும், வாசகர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரி வித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து இதழ் வெளிவருவதற்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்று பல்வேறு சிரமங்களுக்கிடையே இதழுக் குண் டான பொருளாதார உதவியை தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் பெயரை வெளிப்படுத்த விரும்பாத, "சடையப்ப வள்ளல்"களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை அவர்களது பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

தொடர்ந்து உங்களது, நல்லாதரவும் பேரண்பும் கிடைத்திட எல்லாம் வல்ல பகவான் சாயிநாதரை இறைஞ்சுகிறேன்.

அடுத்த 7ஆம் ஆண்டு விழாவிற் குள் நமது இதழுக்கு 1000 சந்தாதாரர் களை சேர்க்க வேண்டும் என்று இலக்கு வைத்திருக்கின்றோம். இவ்விதழை கண்ணுறும் சாயி சேவகர் களும், சாயி பக்தர்களும் நமது சாயி மகராஜ் குருவை தேடி மாத இதழை உங்களது பகுதிகளுக்கும், நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி சாயி சேவையில் இணைந்து எங் களது இலக்கை அடைய உதவுமாறு அன்புடன் வேண்டுகோள் வைக் கின்றோம்.

பகவான் சாயிநாதரின் இப்புனித சேவையில் அடியேனுடன் பயணித்த, பயணித்துக் கொண்டிருக்கின்ற, இனி என் வாழ்க்கை முழுவதும் பயணிக்க இருக்கின்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், நண்பர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனை வரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கி யத்துடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். **மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!**

**வாழ்க வளமுடன்!**
**வாழ்க வையகம்!**

**- அன்புடன் ஆசிரியர்**





குருஜி இராம்சாய் அவர்களின்
"சாயி மகராஜ் குருவை தேடி"
ஆன்மீக மாத இதழின் 6ஆம்
ஆண்டு துவக்க விழாவிற்கு
எங்களது வாழ்த்துக்களும்,
வணங்குதலும்..!

அன்புடன்,

**S.M.S.உமேஷ்**

**ஸ்ரீ ஜனனி பேஷன்ஸ்**
**கொடைக்கானல்.**
**ஆதவன் அசோசியேட்ஸ்,**

**ஸ்ரீ ஷிர்டி சாய் பேன்ஸி ஸ்டோர்**

**15/15/1B சௌந்தரம் காம்ப்ளக்ஸ், மாரியம்மன் கோவில் தெரு, நீலக்கோட்டை 624208. திண்டுக்கல் மாவட்டம். போன்: 9952730818.**

# இறுகப் பற்றுங்கள்



எவர் குரு? எவர் தெய்வ தரிசனம் பெற்றவர்? எவர் நம்மை ஆன்மீகத்தில் மீட்டெடுக்க முடியும்? எனும் பல வினாக் கொக்கிகள் நம்மை சந்தேகக் கடலில் தள்ளிவிடுகின்றன.அதற்கு எவரால் பதில் சொல்ல முடியும்? இருளில் திளைப்பவர் எப்படி வெளிச்சத்தை உற்பத்தி செய்ய முடியும்? அதனால் இறைவனே பதில் எனும் வெளிச்சம் வீசுகிறார். தவறான வழிகளில் நாம் தவறி விழாத வண்ணம் இறைவன் பாபாவே நம்மை தடுத்தாட் கொள்கிறார்.

நாம் பாபாவின் பக்தர்கள் ஆகிய பின்னர், ஆண்டுகள் கழியக் கழிய சாத்மீகமானவர்களாக ஆகிவிட்டோமா? அல்லது சீறி விழும் மனிதனாகத் தான் இருக்கிறோமா? என்று சிந்தித்துப் பாருங்கள். நமது தவறுகளே நம்மை வழிநடத்துகின்றன. தப்பு செய்யாதவர்கள் இங்கு எவருமில்லை. நாம் பாபா பக்தனான பின்பும் தவறு செய்து கொண்டிருந்தோமானால் எந்த தெய்வமும் நம்மை காப்பாற்ற முடியாது. எனவே நம்மை ஆன்மீகத்தில் மீட்டெடுக்க பாபாவைத் தவிர வேறு வழியில்லை. எனவே இறுகப் பற்றிக்கொள்ளுங்கள்.

# சாய் பகவானுக்கு வெள்ளி கிரீடம்



கொளத்தூர் குமரன் நகர் ஸ்ரீ கருமாரியம்மன் திருக்கோவிலில் அமைந்திருக்கும் ஸ்ரீ சீரடி சாய்பாபாவிற்கு வெள்ளிகிரீடம் சார்த்த வேண்டும் என்ற சங்கல்பத்தை பல்வேறு சிரமங்களையும், தனது உடல்நிலை கோளாறுகளைக்கூட பொருட்படுத்தாமல் திரு. "உதி"மூர்த்தி அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்.

செல்லும் இடமெல்லாலாம் சீரடி சாயிநாதரின் உதி பாக்கெட்டுகளை பக்தர்கள் அனைவருக்கும் அளவில்லாமல் விநியோகிக்கும் நமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திரு. "உதி"மூர்த்தி அவர்கள் நல்லோர்களின் துணையோடு சாய்பாபாவிற்கு ஓர் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்ளி கிரீடத்தை ஏற்பாடு செய்து அதை குரு பூர்ணிமா தினத்தன்று பகவான் சாயிநாதருக்கு சமர்பித்தார்.



குரு பூர்ணிமா தினத்தன்று வெள்ளி கிரீடத்தை தன் துணைவியாரோடு உதி மூர்த்தி அவர்கள் ஊர்வலமாக எடுத்துவந்து கோவில் அறங்காவலர்களிடம் ஒப்படைக்க, ஆலய அர்ச்சகர்கள் சாயிநாதரின் விக்கிரகத்திற்கு அபிசேக

அலங்காரங்கள் செய்ய, பக்தர்கள் சாயி பஜன் பாட, ஆனந்த ஆராவரத்துடன் சீரடி சாயிநாதனுக்கு வெள்ளி கிரீடத்தை சார்த்தி ஆரத்தி காட்டப்பட்டது.

உதிமூர்த்தி தம்பதியினர், வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கி ஒவ்வொருவருக்கும் சீரடியில் இருந்து வரவழைக்கப்பட்ட சீரடி சாயிநாதரின் பிரசாதமான லட்டுக்களை வழங்கி சாயி சேவை புரிந்தனர்.

இவ்விழாவிற்கு நமது ஆசிரியரையும் அழைத்து கலந்து கொள்ளச்செய்து மரியதை செய்த திரு.உதி மூர்த்தி சாய்ர ாம் அவர்களுக்கும், ஆலய நிர்வாகிகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

செயற்கரிய செயலை செய்திருக்கும் உதிமூர்த்தி தம்பதியினர் பகவான் சாயிநாதரின் ஆசியை பரிபூரணமாகப் பெற்று நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்வாங்கு வாழ்க வளமுடன் என்று நாம் அனைவரும் வாழ்த்தி வணங்குவோம்.

திரு.உதி மூர்த்தி அவர்களும் அவர்களது துணைவியார் அவர்களும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன், நல்ல மன வளத்துடன் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்ந்து இன்னும் அநேக சாயி சேவைகள் புரிந்து வாழ எல்லாம் வல்ல பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திப்போம்.





**வாழ்க வளமுடன்!**
**வாழ்க வையகம்!**


**சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...**
**www.saidhyanalaya.org**

*சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்*
**99418 16692**

# பெண் நாயன்மார் மங்கையர்கரசியார்



மங்கையற்கரசியார் பழையாறையை ஆட்சி செய்த சோழமன்னின் மகளாகப் பிறந்தார். அவர் சைவ ஒழுக்கத்தில் சிறந்தவராய் வளர்ந்து திருமணப் பருவம் அடைந்தார். சோழமன்னன் அவரை "நின்ற சீர் நெடுமாறன்" என்னும் பாண்டிய மன்னனுக்கு மணம் முடித்து வைத்தார்.

பாண்டிய மன்னன் சமண சமயத்தைச் சேர்ந்தவன் சமண மதத்தை அவன் பெரிதும் மதித்தான். மக்கள் அனைவரும் சமணராக மாறினர். அரசவையில் குலச்சிறையார் என்னும் ஓர் அமைச்சரைத் தவிர மற்ற அனைவரும் சமண சமயத்தை சேர்ந்தவராகவே இருந்தனர்.

நாட்டில் இவ்வாறு சமண சமயத்திற்கு செல்வாக்கு அதிகம் இருப்பதை அறிந்த சைவரான மங்கையர்க்கரசியார் மனம் வருந்தினார். மீண்டும் பாண்டிய நாட்டில் சைவம் செல்வாக்கு பெற வேண்டும் என்று விரும்பினார்.

இவ்வாறிருக்கும் பொழுது திருஞானசம்பந்தர் தஞ்சைக்கு அருகில் திருமறைக்காட்டிற்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டார். இச்செய்தியைக் கேள்விப்பட்டதும் சைவம் தழைப்பதற்கான வழி பிறந்தது விட்டது என்று மங்கையற்கரசியார் மகிழ்ந்தார்.

அமைச்சரான குலச்சிறையாரோடு ஆலோசித்து சம்பந்த பெருமானிடம் தூதுவரை அனுப்பி வைத்தார். தூதுவர், திருஞான சம்பந்தரிடம் மங்கையற்கரசியாரின் மனக்கருத்தைக் கூறினார். சம்பந்தரும் பாண்டிநாட்டுக்கு

வருவதாகக் கூறினார்.

பல திருப்பதிகங்களையும் வணங்கி மதுரையம்பதியை நெருங்கியபோது சம்பந்தரை மங்கையற்கரசியார் அமைச்சரோடு வந்து அடிபணிந்து நின்றார். எமக்கும், எம் குலத்திற்கும் வாழ்வளிக்க வந்த வள்ளலே வாரும்' எனப் பணிந்தார். குலச்சிறையார் சம்பந்தரிடம் இவரே பாண்டிமாதேவி என்று அறிமுகப்படுத்திவைக்க, அரசியோ சம்பந்தரின் செங்கமலப் பொற் பாதத்தில் வீழ்ந்து வணங்கினார். சம்பந்தப் பிள்ளையார் அருள் பெற்றுப் பாண்டிய நாடு இனி சைவத்தில் தழைத்து உயரும் என்ற உறுதியோடு அரசியார் அரண்மனைக்குச் சென்றார்.



அன்று பள்ளியறைக்கு வந்த மன்னன் ஏதும் பேசாமல் சோகமாயிருந்தான். அரசியார் "மன்னா! உமக்கு நேர்ந்ததென்ன? துயரத்துடன் இருக்கிறீரே என விசாரித்தார். அதற்கு அரசன் சோழ நாட்டுச் சிவவேதியர் ஒருவர் நமது சமண அடிளார்களை வாதினில் வெல்ல வந்திருக்கின்றார். அதை கேள்விப்பட்டதில் இருந்து சமண அடியார்கள் துன்பம் அடைந்து இருக்கின்றார்கள். அவர்களின் துன்பத்தை கண்டதில் இருந்து எனக்கும் மனதினில் இனம்புரியாத கவலை ஒட்டிக்கொண்டது.

ஏன் கவலை. யார் வாதினில் வெல்கின்றார்களோ அவர்கள் பக்கம் சேர்தலே முறை. அதன் பொருட்டுக் கவலை ஏன்? என ஆறுதல் கூறினார் அரசியார். அரசனுக்கு ஆறுதல் கூறினாலும் அரசியார் அன்றிரவு கவலை யுடனேயே இருந்தார். வஞ்சனை மிகுந்த சமணரால் சம்பந்தருக்கு என்ன ஆபத்து நேருமோ எனபதே அவர்தம் கவலை. அவ்வாறு ஆபத்தேதும் நேர்ந்து விட்டால் தான் உயிர் துறப்பதே உத்தமம் எனும் உறுதியும் பூண்டார்.

அரசியார் அஞ்சியவண்ணமே அன்று இரவு சம்பந்தப் பெருமான் தங்கியிருந்த மடத்துக்கு சமணர் தீவைத்தனர். இச்செய்தி அரசியாருக்கு எட்டிய பொழுது பெரிதும் மனம் வருந்தினார். தாமும் குலச்சிறையாரும் பிள்ளையாரை இத்தீயவர்கள் வாழும் நாட்டுக்கு வரவழைத்ததே பெரிதும் பிழையாயிற்று என்று மனம் வருந்தினார். அப்பொழுது சமணபாதகர் வைத்த தீயால் சம்பத்தர் தப்பித்தார் என்றறிந்து ஆறுதலுற்றார்.

இந்நிலையிலே மன்னன் வெப்பு




நோயால் பாதிக்கப்பட்ட செய்தியைக் காவலாளர் வந்து அரசியிடம் கூறினர். அதுகேட்ட அரசியார் விரைந்து அரசனிடம் சென்றார். மருத்துவராலும் சமண அடிகளின் மந்திரத்தாலும் வெப்பம் சிறிதும் தணியாது அரசன் வருந்துவது கண்டு அச்சமுற்றார்.

சம்பந்தருக்கு வைத்த தீயே இவ் வண்ணம் வெப்புநோயாக வருத்துகிறதென எண்ணியவராய், திருஞான சம்பந்த சுவாமிகளை நம் அரண்மனைக்கு அழைத்தால் தான் இந்நோய் தீரும்" எனக் கூறினார். "ஞானசம்பந்தன்" எனும் நாமம் மன்னனின் காதில் புகுந்த உடனே அயர்வு நீங்கிய பாண்டியன் மன்னன் உடனே அவரை அழைப்பீராக என உத்தரவிட்டான்.

உடனே அரசியார் அமைச்சருடன் அணையுடைத்துப் பாயும் வெள்ளம் போல் பாய்ந்து சென்று ஞான சம்பந்தர் தங்கியிருக்கும் திருமடத்தை அடைந்தார். அங்கு ஞானத் திருவுருவாயும், வேத காவலராகவும், சிவபெருமானது சீர் பாடும் ஏழிசை அமுதமான சிவபுரப் பிள்ளையைக் கண்டார்.

சிவமாகவே வாழும் பிள்ளைக்கு சமணர் செய்த ஆபத்தை நினைத்துச் சலிப்படைந்தவராய் அடிகளில் வீழ்ந்து அழுது அரற்றினார் அரசியார். அதற்கு சம்பந்தப் பெருமான், ஒன்றும் அஞ்ச வேண்டாம், சமணரை வாதில் வென்று அரசனின் நெற்றியில் திருநீறு அணிவிப்பேன் என உறுதி மொழி கூறினார்.

சம்பந்தர் முத்துப் பல்லக்கில் ஏறி அரண்மனைக்கு எழுந்தருள, மன்னரும் அரசியாரும் அவரை எதிர் கொண்டு அழைத்து பொன்னாலான ஆசனத்தில் அமர வைத்ததைக் கண்டு சமணர்கள் பிள்ளையாரைச் சூழ்ந்து நின்று கொண்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.

உடனே மங்கையற்கரசியார் "நீங்கள் செய்ய வேண்டியது அரசரின் சுர நோயை தீர்த்தலே அதை முதலில் செய்யுங்கள். உங்களால் முடியவில்லை என்றால் சம்பந்தர் செய்வார். எனக்கூற சமணர்களும் மன்னரது சுர நோயை தீர்ப்பதற்கு தங்களது மருந்து மந்திரத்தால் முயற்சி செய்து பார்த்தனர். அவை எல்லாம் மேலும் சுரத்தை அதிகரிக்கவே செய்தன.

அதன்பிறகு ஞான சம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடி மன்னரது நெற்றியில் திருநீற்றை பூச உடனே மன்னனின் வெப்ப நோய் குணமாகியது. அத்துடன் மட்டுமா? சமணர்கள் சம்பந்தருடன், அனல் வாதம், புனல்

வாதம் என்பவற்றிலும் தோற்றுக் பின்வாங்கினர். பாண்டிய மன்னன் தன்னுடைய சுர நோயை தீர்த்த சம்பந்தரால் திருநீறு அணிவிக்கப்பட்டு தனது மூதாதையர் மதத்திற்கு திரும் பியது கண்டு மதுரை மாநகரத்து மக்கள் எல்லோறும் மங்கள திருநீறணிந்து சைவராயினர்.

தான் நினைத்தபடி பாண்டியநாடு சைவத்தை தழுவியதும் மிகுந்த ஆனந்தம் கொண்டார் அரசியார். சம்பந்தப் பெருமானுடன் மதுரை யம்பதியை தரிசித்து திருப்பரங்குன்றம் ஆகிய தலங்களை தரிசித்துவிட்டு சம்பந்தருடன் சோழநாட்டிற்கு செல்ல முற்படுகையில், சம்பந்தர் நீங்கள் பாண்டிய நாட்டில் இருந்தே சிவநெறியை போற்றி இருக்க வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டார். பிற்பாடு திருநாவுக்கரசு சுவாமிகளையும் தம்பதியராய் சென்று தரிசித்து சைவம் செழிக்க பணிசெய்து மதுரையிலேயே வாழ்ந்து முக்தி பெற்றனர்.

மங்கையர்கரசி நாயனாரின் குரு பூஜை சித்திரை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் அவரது அவதார ஸ்தலமான, தஞ்சை மாவட்டம், பழையாறை வடதளி பட்டீஸ்வரம், கும்பகோணம் சோமேசுவரர் திருக் கோவிலிலும், முக்தியடைந்த தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில் நந்திமண்டபம் அருகில் உள்ள நால்வர் சன்னதியிலும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

பழையாறை சோமேஸ்வரன் திருக்கோவிலின் உட்பிரகாரத்தில் மங்கையர்கரசியாரின் திருவுருவச் சிலை தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இவரது குருபூஜை அன்று அனைத்து சிவாலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றது.

சைவம் தழைக்கத் தன்னுயிரையும் கொடுக்க சித்தமாயிருந்த மக்களின் அரசியாகிய, மங்கயர்கரசி நாயனார்

**வாழ்க! வாழ்க!**


எங்களது குரு "குண்டலினி யோகி" திரு. ஸ்ரீராம் அவர்களின் "சாயி மகராஜ் குருவை தேடி" மாத இதழின் 6 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.



அன்புடன்,

அகஸ்டின்

நியூ ஈரா கார்மெண்ட்ஸ்

எண்: 94, வெங்கடேஸ்வரா நகர், சாலமங்கலம் கிராமம், படப்பை.


செல்: 8098066667.

# திருவருள் தேடி..!

ஜெய் சாய்ராம்! கடந்து வந்த பாதையை நாம் திரும்பிப் பார்க்கும் போது சில சம்பவங்கள் நமக்கே மிகவும் ஆச்சரியமாகப்படுவது உண்மைதான். நமது சாய்மகராஜ் சத்ய சாயியாக வந்து என்னை ஆட்கொண்டு வாடகை வீட்டுக்காரனாக இருந்த என்னை சொந்த வீட்டுக்காரனாக மாற்றியதோடு மட்டுமின்றி எனது வாழ்விலும் பல மாற்றங்களை உண்டுபண்ணிய சாய்ராமிற்கு புது மனை புகுவிழாவில் மனதார நன்றி செலுத்தினேன்.

சுவாமி, உனது தயவால்தான் வீடு வாங்க முடிந்தது என்பது உண்மையானால் என் குடிலுக்கு நீயாக எவ்வகையிலாவது வந்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும். ஆனால் நான் உனது ரூபத்தை படமாகவோ, சிலையாகவோ வாங்கமாட்டேன். என் பூஜை அறையில் உன்னை வைத்து வழிபட விரும்புகிறேன். என்றவாறே பாபாவிற்கு மனதிற்குள் கம்பியில்லா தந்தி யடித்துக்கொண்டே நாலாவது மாடியில் இருந்து கீழிறங்கி என் போஸ்ட் பாக்ஸை திறந்து பார்க்கிறேன்.

அதிசயம் அற்புதம் ஸ்ரீ சத்ய சாயியின் போட்டோ அட்டையில் கவர் பேஜாக போடப்பட்ட அம்மாத இதழ் "பவன்ஸ் ஜர்னல்" என் கைகளில் கிடைக்கிறது. இதுவன்றோ




அற்புதம் நினைத்ததும் தாமதமின்றி நிகழ்த அற்புதம்! அற்புதம் என்றால் சாயிதான்! எனது வாழ்வில் அது தாராளமாக கிடைத்தது. அந்த அபார கருணை கற்கண்டாய் இனித்து.

இதன்மூலம் ஒரு மகா பெரிய திட்டமே சாயி என் வாழ்க்கையில் நிகழ்த்தியது என்பதே நான் சென்ற இதழில் எழுதியிருந்த திருப்பம். மிகுந்த சாமர்த்தியத்துடன் நான் கேட்டதைக் கொடுத்து என் மனதில் இடம் பிடித்தாயிற்று, அடுத்து? வேலையை

ஆரம்பிக்கவேண்டியதுதான். அது தானே கர்மா. கணக்கு வழக்குகளைப் பார்த்து பல ஆண்டுகளாக இந்தப் பிறவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் அழுக்குகளை ஒட்டடை அடிச்சு பெண்டு நிமிர்த்தி டிங்கரிங் பார்த்து மராமத்து பார்க்க வேண்டாமா? சாயி தன் வேலையை ஆராமபித்துவிட்டார்.

வேறொன்றுமில்லை. "எனக்கு வேலை போய்விட்டது" பல மாதங்களாக வேறு வேலை இல்லை. சம்பளம் இல்லை கிடைத்த ஓரிரெண்டு வேலையும் நிரந்தரமில்லை. எல்லாம் இழந்ததும் கடைசிலே பகவான நெனச்சு இரண்டு கைகளையும் தலைக்குமேல தூக்கி பகவானேன்னு கதறுன திரௌபதி மாதிரி எனக்குள்ள இருந்து "சாயிராமான்னு ஒரு கதறல். ஆனா அதுவே என் கர்மா கழியும் காலம். அது ஒரு வேதனையான சோதனைக்காலம்.


ஆயினும் தினம் விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம், ஸ்தோத்திரம், பெருமாள் கோவில், சாய்நாமம் என்று ஓர் ஆறுதல். சோதனை காலம் முடிந்து கிளைமேக்ஸ். கையில் இருந்த சேமிப்பு எல்லாம் கரைந்து கப்பல் தரை தட்டும் நேரம். வெறும் 3000 பேங்க் பேலன்ஸ். இந்நிலையில் சென்னையில் என்னுடன் வேலை பார்த்த என் நண்பரின் தாய் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் அடுத்தவரின் முகத்தைப் பார்த்தே அவர்களது ஜாதகத்தை கூறிவிடுவார்கள். என்னைப் பார்த்ததும் என்னுடைய ஜாதகத்தை வாங்கிக்கொண்டு நாளை வந்து என்னைப் பார் என்று கூறிவிட்டு போய் விட்டார்கள்.

அந்நிகழ்வே எனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

(இந்நேரத்தில் எனது நண்பனின் ஆத்மாவிற்கு நன்றி கூறுகிறேன். நண்பர் சாயியுடன் இணைந்து விட்டார்) அடுத்த நாள் நான் அவர்களது வீட்டிற்குச் சென்று பார்த்தேன். அவர்கள் எனக்கு இரண்டு ஆறுதலான செய்தியைக் கூறினார்கள். உனக்கு இப்போதைய அவசரத்தேவை. ஒன்று நல்ல வேலை. மற்றொன்று குடும்பம் நடத்த பணம். அவ்வளவுதானே! என்று கூறிவிட்டு சௌந்தர்யலஹரியில் இருந்து ஒரு ஸ்லோகத்தை குறித்துக் கொடுத்து இந்தப் ஸ்லோகத்தை தினசரி பாராயணம் செய்துவா வேலையில் நல்ல மாற்றம் கிடைக்கும். உனது பொருளாதாரமும் மேம்படும் என்று கூறி கவலைப்படவேண்டாம் என்று அனுப்பிவைத்தார்கள்.

இதுதான் "திக்கற்றவனுக்கு தெய்வம் துணைநிற்கும்" என்ற நம்பிக்கைக்கு ஒரு பிரமானமாகும். துன்பப்பட்ட மனதிற்கு முழுமையான துணை என்றால் அது தெய்வவழிபாடு மட்டும் தான். சொந்தமா வீடு கிடைச்சாச்சு, வாடகை கொடுக்க வேண்டாம் ஆனால் குடும்பம் நடத்த மாசம் குறைந்தபட்சம் அந்தக்காலத்தில், 12000 ஆயிரத்தில் இருந்து 15000 ஆயிரமாவது தேவை. ஆனால் எனது அன்றைய கையிருப்பு ரூபாய் 3800 மட்டுமே!

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நண்பரின் தாய் சொன்னபடி ஒரு வெள்ளிக்கிழமை சௌந்தர்யலஹரி ஸ்லோகத்தை "முழு நம்பிக்கையுடன்" உச்சரிக்க ஆரம்பித்தேன். அம்பாளை மனதார பிரார்த்தனை பண்ணினேன். நடந்ததை எத்தனைபேர் நம்புவீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நடந்ததென்னவோ நூற்றுக்குநூறு உண்மையானது.



ஆம் நண்பர்களே நான் வெள்ளிக் கிழமைதான் ஸ்லோகம் சொல்ல ஆரம்பித்தேன். ஞாயிற்றுக்கிழமை எனது வீட்டின் அருகே இருக்கும் வங்கிக்குச் சென்று பாஸ்புத்தகத்தை அப்டேட் செய்யலாம் என்று சென்றேன். (அது ஒரு கனரா பேங்க் ரெஸிடென்ட் கிளை ஞாயிறு அரைநாள் வேலை உண்டு). வங்கி ஊழியர் என் பாஸ்புக்கை அப்பேட் செய்து கொடுக்க, நான பாஸ்புக்கைப் பாரத்தேன் எனக்கு மயக்கம் வருவதுபோல் இருந்தது. என்கண்களையே என்னால் நம்ப முடியவில்லை.

ஏனென்னால் ரூபாய் 3800 பதில் 53800 இருந்தால் எப்படி நம்பிக்கை வரும். அது எனக்கு ஆச்சர்யமாகவும் சற்றே ஆறுதலாகவும் இருந்தது. சந்தேகத்துடன் மீண்டும் ஒரு முறை வங்கி ஊழியரிடம் செக்பண்ணச் சொல்கிறேன். அவருடைய பதில் என்னை மேலும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. உங்களுக்கு பிராவிடன் பண்ட் கணக்கில் இருந்து பணம் வந்திருக்கின்றது என்றார் வங்கி ஊழியர்.

அந்தகாலத்தில் (2001) வங்கியில் அக்கவுண்டிற்கு நேரடியாக பணம் வருவது வழக்கத்தில் இல்லை. ஒன்றரை வருடங்களாக எனக்கு வரவேண்டிய பிராவிடண்ட் தொகை அதுவும் நேரடியாக என் கணக்கிற்கே வந்திருக்கின்றதே! அதுவும் பிராவிடண்ட் பணமெல்லாம் அவ்வளவு எளிதாக நம் கைக்குக் கிடைக்காத காலம். பக்தனின் தேவையறிந்து பூர்த்தி செய்வது நமது சாய்ராமின் சிறப்பு என்பதற்கு இது இரண்டாவது உதாரணம்.

இருக்க இடம், உண்ண உணவு, அன்றாடத் தேவையாகி இவை இரண்டும் உறுதி செய்தாகிவிட்டது. கர்மக்கண்க்கு நேர் செய்யப்பட்டது. எனது தேவைப்படி இந்த வரவு 3,4 மாதங்களுக்கு என் குடும்பத்தின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி என்னை மன உளைச்சலில் இருந்து பாதுகாக்கும். சாய்ராமா! என்னே உனது பக்த வாத்சல்யம். ஸ்லோகம்

சொல்ல ஆரம்பித்த மூன்றாம் நாளே முதல் தேவை நிறைவேறியது.

இனி இரண்டாவது தேவையான நல்ல, நிரந்தரமான வேலை கிடைக்க வேண்டும். அதுவும் கிடைத்தது. நான் கொஞ்சமும் எதிர்பாரத விதத்தில் ஆச்சர்யமான அனுகிரகத்துடன் நம் சுவாமியின் கருணையை எப்படி கற்பனை செய்ய முடியும்.

இரண்டாவது தேவையை நிறைவேற்ற என் நண்பனின் மூலம் சுவாமி அனுப்பிய இடம் "சிலக்கூர்" ஸ்ரீனிவாசப்பெருமாள் கோவில்.

சிலக்கூர் என்பது ஹைதராபாத்தில் இருந்து முப்பது கிலோ மீட்டர் தூரத்தில்உள்ள ஒரு அழகான கிராமம். அங்கே 500 ஆண்டுகள் பழமையான திருக்கோவிலில் அருள்பாலிக்கும் பெருமாளுக்கு தற்போதைய நாமம்"

"விசா பாலாஜி" இங்கே வெளிநாடு செல்வதற்கு விசா வேண்டி வருபவர்கள் ஏராளம். சுமார்23 வருடங்களுக்கு முன் ஸ்ரீனிவாசராவ் என்ற எனது நண்பர் மூலம் என்னை அங்கு சுவாமி அனுப்பி வைத்தபோது எனக்கு எந்த விபரமும் தெரியாது. அங்கு சென்றால் ஒரு நல்ல வேலை கிடைக்கும் என்றுதான் சென்றிருந்தேன்.

நாங்கள் சென்ற போது ஆலயத்தில் 2,3 பேர்கள் இருந்தார்கள். ஆலயத்தில் "பவர்கட்" ஒரு சிறிய விளக்கு ஒளியில் பெருமான் காட்சிதந்தார். செயற்கை யாக பவர் கட்டாகலாம். யாராலும் தடை செய்ய முடியாத "பவர்" சிலாக்கூர் பாலாஜின் பவரை நான் உணர்ந்த அந்த தருணம் அது ஓர் மயிர் கூச்செரியும் ஆன்மீக அனுபவம். அடுத்த இதழில் விவரிக்கின்றேன்.

– (தொடரும்)




6ஆம் ஆண்டு துவக்க விழா காணும் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழுக்கு எங்களது இதயப் பூர்வமான வாழ்த்துக்கள்.

சாயி பாபாவின் அருளோடும், ஆசியோடும் ஆண்டுகள் பல தாண்டி, சாதனைகள் பல புரிய வாழ்த்துகிறோம்.

**A.S.V. SURESH BABU & FAMILY,**
**Ponniamman Medu,**
**Chennai - 10.**

# உணவை சத்தாக மாற்றும் கத்தரிக்காய்!



நம் நாட்டில் ஆண்டு முழுவதும் கிடைக்கும் காய்கறிகளுள் கத்தரிக் காயும் ஒன்றாகும். கத்தரிப்பிஞ்சும், முற்றிய காய்களும் சமைத்து உண்ண உபயோகப்படுகின்றன!

வாதநோய், ஆஸ்துமா, ஈரல் நோய்கள், கீல்வாதம், சளி, பித்தம், தொண்டைக்கட்டு, மலச்சிக்கல், கரகரப்பானகுரல், உடல் பருமன் முதலியவற்றைக் குணப்படுத்தும் காய்கறிகளுள் கத்தரிக்காய் குறிப்பிடத் தக்கது.

100 கிராம் கத்தரிக்காயில் புரதம்1.4 கிராம், கொழுப்பு 0.3 கிராம், நார்ச்சத்து 0.3 கிராம், தயாமின் 0.04 மில்லி கிராம், ரைபோபிளேவின் 0.11 மில்லிகிராம், நிகோடினிக் அமிலம் 0.09 மில்லிகிராம், வைட்டமின் 'சி' 12 கிராம், வைட்டமின் 'ஏ' 124 சர்வதேச அலகுகள் என்னும் கணக்கில் உள்ளன. 100 கிராம் காயில் கிடைக்கும் கலோரி அளவு 24 தான்.

கத்தரிக்காய் பிஞ்சாகச் சாப்பிடுவதே நல்லது. முற்றிய பெரிய காய்களைச் சாப்பிட்டால்தான் உடம்பில் அரிப்பு ஏற்படும். குறிப்பாக, வீட்டிலே வளர்த்துப் பிஞ்சாகப் பறித்துச் சாப்பிட வேண்டிய காய்களுள் இதுவும் ஒன்றாகும்.

தக்காளிக்கு இணையானது, இக்காய். தக்காளியைப் போலவே எடை, புரதம், கலோரி அளவு, தாது உப்புகள் முதலியன கத்தரிக்காயில் உள்ளன. ஆனால் வைட்டமின் 'ஏ'யும், வைட்டமின் 'சி'யும் குறை வாகவே உள்ளன. இவற்றை ஈடுசெய்யும் வகையில் வைட்டமின் 'பி' தக்க அளவில் உள்ளது. இதனால் நாம் சாப்பிடும் மற்ற உணவுகள் உடனடியாகச் சிதைந்து சத்தாக மாறக் கத்தரிக்காயில் உள்ள வைட்டமின் 'பி' பயன்படுகிறது.

பாரிசவாயுநோய் தடுக்கப்படுகிறது. பசியின்மை குணமாகிறது. உடல் வலிவு குறைவது தடுக்கப்படுகிறது. மூச்சுவிடுதலில் சிரமம், தோல் மரத்துவிடுவது முதலியவை யும் தடுக்கப்படுகிறது.

முற்றிய காய்கள் உடல் வளர்ச்சிக்குப் பயன்படும். காரணம், இவற்றில் வைட்டமின் 'ஏ' அதிக அளவில் இருக்கிறது. அளவாகப் பயன்படுத்தினால், நோய்வாய்ப்பட்டு உடல் திறன் குறைந்தவர்களுக்கும், உடல் வளர்ச்சி குறைந்தவர்களுக்கும் மிகச்சிறப்பாக பயன்படும். இதனால் கண்பார்வைத் திறனும் அதிகரிக்கும்.

உடலுக்கு சூடு தரும் காய்கறி இது. எனவே, மழை நேரத்திலும், இரவு நேரத் தில் உடல் கதகதப்பாய் இருக்கக் கத்தரிக் காய் குழம்பு சமைத்து உண்ணலாம். கத்தரிவற்றலும் உடம்பில் சூட்டை ஏற்படுத்தும். நீர்க்கனத்தைக் குறைக்கும். உடல் பருமனைக் குறைக்கும்.

இந்தியாவில் தோன்றியது கத்தரிக்காய். நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே

பயிர் செய்யப்பட்டுவருகிறது. இந்தியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளின் முக்கிய காய்கறிப் பதார்த்தமாய் இப்பொழுதும் இருந்து வருகிறது.

மத்திய தரைக்கடல் நாடுகளிலும், பால்கன் பகுதிகளிலும் முக்கிய உண வாகக் கத்தரிக்காயைப் போற்றி உண்ணு கின்றனர். அமெரிக்காவின் முக்கியமான முதன்மையான 22 காய்கறிகளுள் கத்தரிக்காயும் ஒன்றாய் விளங்குகிறது.

உடம்பில் சொறி சிரங்கு, புண் உள்ளவர் கள் கத்தரிக்காயைத் தவிர்ப்பது நல்லது. உடலுக்குச் சூடு தரும் காய் என்பதால் அரிப்பை உண்டு பண்ணிப் புண்கள் ஆற அதிக நாள் ஆகும். மற்றவர்கள் மருந்தைப்போல் கத்தரிக்காயை உணவில் சேர்த்து உடலுக்கு நன்மை பெற வேண்டும்.

இக்காய் ஊதா அல்லது பச்சை நிறத் தில் இருக்கும். அவை இளம் பிஞ்சாய் இருந்தால், சமையலில் சேர்த்து நாம் சாப்பிடும் மற்ற உணவுகள் விரைந்து சிதைந்து சத்தாக உடலுக்குக் கிடைக்க இது பயன்படும்.

வீட்டில் நன்கு உரமிட்டு வளர்க்கப்படும் கத்தரிச்செடியில் உள்ள பிஞ்சு உடலுக்கு வளத்தையும் வலிமையையும் தவறாமல் தரும்.

நம் மண்ணில் விளைந்த நாட்டுக்காய் என்று கூறப்படும் கத்திரிக்காய் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் கிடைக்க கூடியது. மக்கள் அனைவரும் அளவறிந்து உணவில் சேர்த்துக் கொண்டு வளமோடு வாழ வேண்டுகிறோம்.

**வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!**

**6ஆம் ஆண்டில் அடி எடுத்துவைக்கும் எங்கள் "சாயி மகராஜ் குருவை தேடி" மாத இதழுக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள். மேன்மேலும் பல ஆண்டுகள் சாயி சேவையில் சாதனைகள் புரிய வாழ்த்துகிறோம்.**



**அன்புடன்,**

**எஸ். புருஷோத்தமன் குடும்பத்தார்**
**பாடி, சென்னை-50**

தொடர் –61

# குருவைத் தேடி

சற்றுதூரத்தில் நாராயணகாவ் பேரூந்து நிலையம் கண்ணில் பட்டது. அதற்குள் சென்று காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, வெளியே வந்தேன் குளிர் சற்றுஅதிகமாகவே என்னை நடுங்கவைத்தது. ஒரு டீ குடிக்கலாம் என்றால் அதற்குகூட என்னிடம் பணம் இல்லை. "பாபா இதென்ன சோதனை என்னை கண் பாரப்பா" என்று முதல்முறையாக பாபாவிடம் எந்தவிதமான தடையுமின்றி வேண்டு தல் வைத்தேன்.

எனக்கே அது சற்று ஆச்சர்ய மாகப்பட்டது. விரிவான அறிவு இல்லாத காரணத்தினாலும், அதிகம் படிக்காததினாலும் அக்காலத்தில் என் தாய் மொழி மீது மட்டுமே அதீத பற்று வைத்திருந்தேன். ஆதலால் என் மனதிற்குள் பாபா மராட்டியர் என்ற வேறுபாடு இருந்தது. என்னுடைய இளம் பிராயத்தில் இருந்து தமிழ் சித்தர்கள் மீது மட்டுமே எனக்கு அதிக ஆர்வம்.

ஆகையால் பாபா மராட்டி மொழி பேசுகிறவர் என்ற எனது குறை அறிவால் சாயிபாபாவை என்னால் முழுமையாக ஏற்க முடியவில்லை. தவிர பாபாவைப்பற்றி எந்த ஒரு தனிப்பட்ட அனுபவமும் எனக்கு இருந்ததில்லை. இவ்வளவு வேறுபாடுகள் இருந்தாலும் தப்போது என்னிடம் இருந்த எல்லா வற்றையும் இழந்துவிட்டதனால், வேறுவழியே இல்லை என்றவுடன் மனம் தானாக எனக்கு முன்னால் இருக்கும் ஒரே நம்பிக்கையான சாயிபாபாவை பற்ற ஆரம்பித்தது.

அந்தப்பற்று இறுகுமா? பலன் கிடைத்ததும் விலகுமா என்பதை அப்போது நான் என்னிப் பார்க்க வில்லை. ஏனெனில் "மனம் இருந்தால் தான் மார்க்கம்" என்பார்கள். இறைவன் மனிதன் மனம். மனம் தான் மனிதனை மனிதனாக வைத் திருப்பதற்கும், மனிதனை இறைவனாக உயர்த்துவதற்கும் காரணமாக இருக்கின்றது.

அந்த என் மனம் என்னை என்ன செய்யப் போகிறது என்று அப்போது நான் அறிந்திருக்கவில்லை. எனவே மனம் போன போக்கில் செல்வது என்று முடிவு செய்தேன். எனவே எல்லாவற்றையும் இழந்த என் மனம் பாபா பாபா என்று பற்ற ஆரம்பித்தது.

இவ்வுலகில் நாம் பெறுவது அனைத்துமே "அறிவு" நாம் இழப் பது அனைத்துமே "ஞானம்" என்பதை உணர்ந்து கொண்ட தருணம் அது. ஆனால் நாம் இங்கு பெறுவதை மட்டுமே விரும்புகிறோம். இழப்பதை விரும்புவதில்லை. எனவே ஞானத்தைவிட அறிவு அதிகமாக இருக்கிறது. ஆதனால் ஞானத்தை அடைய அறிவே தடையாய் இருக்கிறது.

நாம் உலகைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் அறிவு தேவை. ஆனால் அந்த அறிவு எனக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வத்தை கொடுப்பதனால் அதுவே ஞானத்தை அடைய தடையாய் நிற்கிறது. நான் யார் என்பதை அறிய

வேண்டுமானால் என்னுடையது என்ற அறிவு என்னைவிட்டுப் அகல வேண் டும். ஏனெனில் என்னை அறி வதற்கு அறிவு தேவையில்லை. ஞானம்தான் தேவை. அறிவு தகவல் சம்பந்தப்பட்டது. ஞானம் அனுபவம் சம்பந்தப்பட்டது.

நாராயண்காவ் அந்த காலை வேலையில் சற்று பரபரப்பாகவே காணப்பட்டது. பேரூந்து நிலையத்தில் அதிகப்பட்சம் 80 சதவீதம் பேர் விவசாயிகளாகவே தென்பட்டனர். நான் நின்று கொண்டிருக்கையில் என்னைத் தாண்டி ஒரு பேரூந்து, பேரூந்து நிலையத்திற்கு உள்ளே சென்று நின்றது. அதன் நடத்துனர் மக்களை நோக்கி, சந்த்வாடி, சங்கம்நேர், சீரடி என்று கூவினார்.

ஆகா! இதோ சீரடி வண்டி நிற்கிறது. ஆனால் என்னிடம் இப்போது பணம் இல்லை. என்னிடம் பணம் இருந்த போது வண்டி இல்லை. ஆகா! இது தான் வாழ்க்கையோ என்று மனதிற்குள் சிரித்துக்கொண்டே சாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். காலை வேலை பனிக்காற்று ராகம் பாடியது.

நடுங்கிக்கொண்டே அரை கிலோ மீட்டர் நடந்திருப்பேன். காலையிலேயே விவசாய வேலைக்காக மக்கள் எனக்கு முன்னே தட்டு முட்டு சாமான்களோடு நடந்து கொண்டிருந்தனர். எங்கள் முன்னால் சென்ற ஒரு சரக்கு வாகனம் எங்களை ஓரங்கட்டி நின்றது.

நாங்கள் ஓரமாக நிற்க, அந்த வாகனத்தில் இருந்து இரண்டு இளைஞர்கள் கைகளில் இரண்டு பெரிய பிலாஸ்கோடு இறங்கினர். அனைவரிடமும் "சாய் பியோ" என்றபடி பேப்பர் கப்புகளில் தேனீர் ஊற்றி தந்தனர். எனக்கும் ஒரு கப்



தேனீர் கிடைத்து.

டீ குடிக்கக்கூட பணம் இல்லையே என்று வருத்தப்பட்டு, பாபா என்னை கண்பாரப்பா என்று வேண்டியதை நினைத்துக்கொண்டே அவர்களது வாகனத்தைப் பார்த்தேன். அதில் ஓர்புறம் பாபாவின் படம் அச்சடிக்கப் பட்டு அதில் ஏதோ எழுதியிருந்தது. அது என்னவென்று விசாரித்தேன். அது நாராயண்காவ்வைச் சேர்ந்த பால்பண்ணையின் முகவரி மராட்டியத்தில் அதிக குளிர் இருக்கும் சமயங்களில் பால்பண்ணையின் சார்பாக விவசாயிகளுக்கு இதுபோன்று இலவசமாக தேனீர் வழங்குவார்களாம்.

எப்படியோ நான் கேட்ட உடனேயே பாபா எனக்கு தேனீர் வழங்கிவிட்டார். பாபா நம்மை கைவிடமாட்டார். என்ற நம்பிக்கையும் தைரியமும் முதல் முறையாக வந்தது. முதலில் சீரடி எத்தனை கிலோ மீட்டர் என்று தெரிந்து கொள்ள வேண்டும். என்று எதிர்பட்ட ஒரு இளைஞனிடம் கேட்டேன். அவன் நூறு கிலோ மீட்டர் இருக்கும் என்றான் தோராயமாக.

இன்றிரவிற்குள் ஐம்பது கி.மீ நடந்து விட்டால் நாளை இரவு நாம் சீரடிக்குச் சென்று விடலாம். என்று மனதிற்குள் கணக்குப்போட்டுக்கொண்டு வேகமாக நடக்க ஆரம்பித்தேன். கால் விரல்களுக்கு இடையே ஏற்பட்ட நீர்க்கட்டிகள் எனது வேகத் தை தடை செய்தன. பல்லைக் கடித்துக் கொண்டு நாளை இரவிற்குள் நாம் சீரடி சென்றுவிடவேண்டும் என்ற வெறியோடு நடக்க ஆரம்பித்தேன்.

வரிசையாக போர்வாடி, அலப்டா, சந்த்வாடி என்று சிறு சிறு கிராமங்கள் வந்து கொண்டே இருந்தன. காலை ஒன்பது மணியிருக்கும் ஒரு கிராமத்தின் கடைவீதியில் நடந்து கொண்டிருந்தேன். கால் வலி அதிகம் இருந்ததால் சற்று உட்கார்ந்து செல்லலாம் என்று பூட்டியிருந்த ஒரு கடையின் வாசலில் அமர்ந்தேன். வயிறு வேறு கடுமையாக பசிக்க ஆரம்பித்தது. அருகில் இருந்த அடிபைப்பில் தண்ணீர் பிடித்து வயிறு முட்ட குடித்தேன்.

பின்பு மீண்டும் கடைவாசலுக்கு வந்து மெதுவாக செருப்பை கழட்டினேன் காலில் கொப்பளங்கள் தோன்றி கால் வீங்கியிருந்தது. என் கால்களை நான் அதுவரை அப்படிப் பார்த்தது இல்லை. அப்படியே கைகளைப்பார்த்துக் கொண்டேன். எண்ணை இல்லாமல் சொரிபிடித்து



அழுக்கடைந்து போயிருந்தது. அப்படியே உடைகளும் அழுக்கேறி இருந்தது. முகம் எப்படி இருக்கின்றதோ. கண்ணாடி பார்த்து இரண்டு நாளாகிறது.

ஒரு மாதத்திற்கு முன்பு நான் இருந்ததற்கும், இன்று நான் இருப் பதற்கும் உள்ள நிலையை என் மனம் நினைத்ததும்தான் தாமதம். எங்கிருந்தோ வந்த அழுகை வெடித்துக் கிளம்பியது. சட்டென்று முகத்தை கைகளால் மூடிக்கொண்டு பாபா எனக்கு அமைதியைக்கொடு. எனக்கு காசு பணம் எதுவும் வேண்டாம் நான் என் குடும்பத்துடன் எங்காவது கிராமத்தில் போய் அமைதியாய் வசித்துக்கொள்கிறேன். இப்போதைய பிரட்சனைகளில் இருந்து என்னை காப்பாற்று என்று விசும்பினேன்.

அப்போது யாரோ என் தலையில் கை வைத்துபோல் இருந்தது. நான் சட்டென்று தலையை தூக்கிப் பார்த்தேன். வேட்டி சட்டை அணிந்து நெற்றி நிறைய திருநீறு பூசிய ஒரு

40 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவர் நின்றிருந்தார். நான் ஒரு மருத்துவர் என்னுடைய கிளீனிக் எதிர் புறம் இருக்கிறது. மெதுவாக எழுந்து வந்தீர்களேயானால் உங்களது கால்களுக்கு என்னாலான மருத்துவ உதவி செய்வேன் என்றார் அழகிய தமிழில்.

நான் மறு பேச்சு பேசாமல் அவரின் பின்னே எழுந்து சென்றேன். என்னை கிளீனிக்கின் உள்ளே அழைத்துச் சென்று அமரவைத்து என்கால்களில் உள்ள கொப்புளங்களை சிரிஞ்சால் குத்தி நீரை அகற்றி சுத்தம் செய்து மருந்து போட்டுவிட்டார். பின்பு என் கண்களில் இருந்து வழியும் கண்ணீரைப் பார்த்துவிட்டு, நான் உங்களை ஒன்றும் கேட்கமாட்டேன். என்னைப்பற்றி கூறலாம் அல்லவா என்றவர், எனது பூர்வீகம் திருநெல்வேலி அப்பா அம்மா எல்லாம் மும்பையில் செட்டில் ஆனவர்கள்.

நான் சிரமப்பட்டு டாக்டருக்குப் படிச்சேன். நானும் என் நண்பர்களும் மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காக கிராமங்கள் தோறும் கிளீனிக் வைத்து ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்கின்றோம். நீங்கள் நடந்து வந்ததையும் தண்ணீர் குடித்ததையும் நான் பார்த்தேன். உங்களுக்கு ஏதோ உதவி தேவைப்படுவதாக நான் உணர்ந்தேன். அதுதான் உங்களிடம் வந்து பேச்சுக் கொடுத்தேன். உங்களைப்பார்த்தால் தமிழர் போல் தெரிகின்றது. நீங்கள் தமிழர்தானே என்றார்.

நான் ஆமாம் என்றேன். உங்களுக்கு வேறு ஏதாவது உதவி தேவையா என்றார் அவர். நான் ஒருவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டும் என்றேன். அவர் லேண்ட்லைன் போனை என் அருகில் வைத்தார். நான் மீண்டும் ஸ்ரீராம்பூர் வியாபாரியை தொடர்பு கொண்டு நான் நாளை மறுநாள் சீரடிக்கு வந்துவிடுவேன். கட்டாயம் எனக்கு பணம் வேண்டும் என்றேன். அவரோ நான் தற்போது சோலாப்பூரில் உள்ளேன். நீங்கள் சீரடிக்கு வந்ததும் என்னை தொடர்பு கொள்ளுங்கள் என்றார். நான் சரி என்றபடி போனை வைத்தேன்.

மருத்துவர், ஓ! நீங்கள் சீரடிக்கு நடந்து செல்கின்றீர்களா, பரவாயில்லை. உங்களுக்கு பாபாவின் கருணை கிட்டட்டும். உங்களுக்கு பணம் ஏதாவது தேவையா என்று கேட்டார். இல்லை அய்யா. நீங்கள் செய்த உதவியே போதும். மிக்க நன்றி! நான் புறப்படுகிறேன். நாளை இரவிற்குள் நான் சீரடி செல்லவேண்டும் என்று எழுந்து கொண்டேன்.

சற்று இருங்கள் என்று உள்ளே சென்றவர் ஒரு மாத்திரை பட்டையை கொடுத்து இதை போட்டுக் கொள்ளுங்கள் செப்டிக் ஆகாது என்றவர், சீரடி இங்கிருந்து 90 கிலோ மீட்டர் இருக்கிறது. இங்கிருந்து 50 கி.மீ சென்றால் சங்கம்நேர் என்ற ஊர் வந்துவிடும். ஊரின் தொடக்கத்தில் ஒரு மகாலட்சுமி கோவில் ஒன்று வரும் அங்கு இன்றிரவு தங்கிகொள்ளுங்கள்.

அங்கிருந்து நாளை காலையில் புறப்பட்டால் இரவு சீரடியை அடைந்து விடலாம் என்றவர் வழியில் உதவும் என்றபடி சில பிஸ்கட் பாக்கெட்டுகளையும், ஒரு தண்ணீர் பாட்டிலையும் என்னிடம் கொடுத்து வாழ்த்துக்கள். என்னை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் என்றார். நான் அவரை நன்றியுடன் பார்த்து வணங்கி உங்கள் பெயர் அய்யா என்றேன். அவர் டாக்டர் சாய்ராம் என்றார்.

**– (தொடரும்)**

# காஞ்சிபுரம் மேல்சிறுனை

# ஸ்ரீசக்ர தத்த ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடம் உருவான கதை

**ஸ்ரீ சாய் பீடம் உருவான கதை.**
**ஜெய் குருதேவ தத்த!**
**ஜெய் ஸ்ரீபாதா! ஜெய் சாயிநாதா!**
**குரு பிரம்மா குரு விஷ்ணு**
**குரு தேவோ மஹேஸ்வர**
**குரு சாக்ஷாத் பரப்பிரம்மா**
**தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ**

சனாதன தர்மத்தில் குரு ஒரு முக்கியமான இடத்தில் வைத்து போற்றப்படுகிறார். குரு என்கிற வார்த்தையை பிரிக்கும் போது, கு+ரு என்றாகிறது. கு என்றால் இருள், ரு என்றால் நீக்குபவர். அதாவது அஞ்ஞானம் என்னும் இருளை நீக்குபவர் என்று பொருள்படும். குரு தன் சீடரை தேர்ந்தெடுத்து அவருக்கு பலவிதமான போதனைகள் புரிந்து அஞ்ஞானத்தை அகற்றி மோக்ஷப் பாதைக்கு அழைத்துச் செல்கிறார்.

கலியுகத்தின் பிரபாவத்திலிருந்து ஒருவர் தப்பிக்க வேண்டுமானால் குருவின் தேவை இன்றியமையாகும். மேலும் நம் அனைவருடைய வாழ்க்கை வளமாகவும் நிறைவாகவும் அமைய குருவின் வழிகாட்டுதல் மிகவும் அவசியம். அப்படிப்பட்ட குரு சத்குரு என்று அழைக்கப்படுகிறார்.

ஸ்ரீ தத்தாத்ரேயர் குருக்களுக் கெல்லாம் குருவான ஆதிகுரு. ஸ்ரீ



தத்தாத்ரேயர் கிருத யுகம் முதல் இப்போது வரை சிரஞ்சீவியாக இருந்து வருகிறார். அவர் கலியுகத்தில் பல அவதாரங்களாகவும் அம்ச அவதாரங்களாகவும் தோன்றி மக்களை நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவருடைய அவதார விவரங்களாவன:

**முதல் அவதாரம்:** ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்

**இரண்டாவது அவதாரம்:** ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி

**மூன்றாவது அவதாரம்:** ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர்

**நான்காவது அவதாரம் :** ஸ்ரீ மாணிக் பிரபு

**ஐந்தாவது அவதாரம் :** ஸ்ரீ சாய்பாபா

ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் அவதார மான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் கி.பி. 1320 ஆம் ஆண்டு விநாயக சதுர்த்தி யன்று ஆந்திர மாநிலத்தில் உள்ள பிடாபுரம் என்னும் ஊரில் பிறந்து, கி.பி. 1350 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் உள்ள குருவபுரம் என்னும் இடத்தில் தன் அவதாரத்தை முடித்துக் கொண்டார். (கி.பி. 1320 - கி.பி. 1350)

ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள கரஞ்சாவில் பிறந்து கர்நாடக மாநிலத்தில் உள்ள கானகாபூரில் தன் அவதாரத்தை முடித்துக் கொண்டார். (கி.பி. 1378 - கி.பி. 1459)

ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர் கரையான் புற்றில் இருந்து தன்னை வெளிப்ப டுத்திக் கொண்டு , தேச சஞ்சாரியாக பல ஆண்டுகள் வாழ்ந்த பின்னர், மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள அக்கல்கோட் என்னும் ஊரில் தன் அவதாரத்தை முடித்துக் கொண்டார். (கி.பி. 1878 வரை)

ஸ்ரீ மாணிக் பிரபு கர்நாடக மாநிலத் தில் உள்ள கல்யாண் என்னும் ஊரில் பிறந்து மாணிக் நகர் என்னும் ஊரில் தன் அவதாரத்தை முடித்துக் கொண்டார். (கி.பி. 1817 கி.பி. 1865)

ஷீரடி சாய்பாபா மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள ஷீரடி என்னும் ஊரில் 16 வயது பாலகனாக தோன்றி அங்கேயே வாழ்ந்து கி.பி. 1918 ஆம் ஆண்டு ஷீரடியில் தன் அவதாரத்தை முடித்துக் கொண்டார். (கி.பி. 1918 வரை)

"சம்பவாமி யுகே யுகே" என்கிற கிருஷ்ண பரமாத்மாவின் வாக்கை நிரூபிக்கும் வண்ணம், காஞ்சிபுரம் மாவட்டம் மேல்சிறுனை கிராமத்தில் ஸ்ரீசக்ர தத்த ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடம் அமைந்துள்ளது. தர்மத்தை நிலைநாட்டுவதற் காகவும், சத்ய யுக ஸ்தாபனத்திற்க்காகவும், ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் சங்கல்பத்திற் கிணங்க, இந்த பீடம் உருவானது.

ஸ்ரீ லலிதா அம்மா என்கிற உன்னதமான பக்தையை ஸ்வாமி தேர்ந்தெடுத்து இப்பணியை அவர்க ளிடம் ஒப்படைத்துள்ளார். சாதாரண இல்லத்தரசியாக இருந்தவரை எப்படி ஒரு பீடாதிபதியாக ஸ்வாமி உருவாக் கினார் என்பதை தெரிந்து கொள்வோம்.

ஸ்ரீ லலிதா அம்மா ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் 1977 ஆம் ஆண்டு, ஸ்ரீ லக்ஷ்மண மூர்த்தி, ஸ்ரீமதி பரிமளா ராணி என்கிற பவித்ரமான

தம்பதிக்கு மகளாகப்பிறந்தார். மூன்று சகோதரர்களுக்குப் பிறகு நான்காவது மகளாகப் பிறந்து மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டார்.

அனைவரையும் போல தன் படிப்பை முடித்தாலும், அவருள் இருந்த இறையின் சக்தியை சிறு வயது முதலே உணரத் தொடங்கினார். நடப்பது என்னவென்று அறியாத, நான்கு அல்லது ஐந்து வயது சிறுமியாக இருந்த போது, காணும் கனவுகள் அனைத்தும் மெய்யாகின. சிறு வயது சொப்பு விளையாட்டுகள் கூட பூஜை ஆராதனை போன்ற முறையிலேயே இருந்தது.

ஒன்பதாவது வகுப்பு படித்துக்

கொண்டிருந்த போது, அவர்கள் வீட்டுக்கு அருகில் இருந்த ஸ்ரீ லலிதா உபாசகர் மூலம் ஸ்ரீ லலிதா உபாசனை வழங்கப்பட்டது. பின்னர் பத்தாவது படிக்கும் போது அதாவது 1994 ஆம் ஆண்டிலிருந்து மனதில் தோன்றும் காட்சிகள் மெய்யாகின.

காலம் உருண்டோடின, வருங்கால திட்டங்கள் பற்றி ஏதும் அறிந்திடாத விளையாட்டுத்தனமான செல்ல மகளாக இருந்தவர், 1997 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜவஹர்நாத் என்னும் உன்னதமானவரை மணந்து கொண்டு திருமண பந்தத்திற்குள் நுழைந்தார். திருமணத்திற்கு பின் காக்கிநாடாவில் இருந்து சென்னைக்கு குடிபெயர்ந்து இரு குழந்தைகளுக்கு தாயாகி சிறந்த இல்லத்தரசியாக வாழ்ந்து கொண்டிருந்தார்.

சுமார் 2003 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை ஒரு வருடத்திற்கு , அவருடைய கனவில் இரு பெரிய பாதங்கள் தொடர்ந்து தோன்றிக் கொண்டே இருந்தன. இது என்ன? யாருடையது என்பதை அவரால் அறிந்து கொள்ளவே முடியவில்லை. கனவிலேயே இது யாருடைய பாதம் என்று மீண்டும் மீண்டும் கேட்ட போதும், அதற்கான பதிலேதும் கிடைக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல, கனவில் தோன்றிய பாதங்கள் நேரில் ப்ரத்யக்ஷமாயின.

இவ்வாறு தொடர்ந்து கொண்டிருந் தபோது, 2004 ஆம் ஆண்டு காக்கி நாடாவுக்கு சென்றிருந்த சமயத்தில், அவருடைய தந்தையின் சிரார்த்த தினம் வந்தது. வீட்டில் சிரார்த்தம் கொடுக்க முடியாத சூழ்நிலை உரு வானதால், காக்கிநாடாவுக்கு அருகில் உள்ள பாதகயா க்ஷேத்திரமான பிடா புரத்தில் சிரார்த்தம் செய்யலாம் என்று அவருடைய மூத்த சகோதரர் முடிவு செய்தார்.

அவர்களுடன் அங்கு சென்ற ஸ்ரீ லலிதா அம்மா, சிரார்த்தம் முடிவடைந்த பின்னர் அவ்வூரில் வாழ்ந்த ஒரு குருவின் சமஸ்தானத்திற்கு தரிசனம் செய்வதற்காக அனைவருடன் சென்றார். அதுதான் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருடைய சமஸ்தானம்.

அந்த கோவிலில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த பாதுகையும், தன்னுடைய கனவில் தோன்றிக் கொண்டிருக்கும் பாதுகையும் ஒன்றுபோல இருப்பதை கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். பின்னர் அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அவருடைய சரித்திர மான “ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம்” என்னும் கிரந்தத்தை பாராயணம் செய்தார்.

அச்சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப ரின் தரிசனம் அவர்களுக்கு கிடைத்தது. அவர் ஸ்ரீ லலிதா அம்மாவிடம் தன்னைப் பற்றி அனைவரிடம் சென்று கூறுமாறு ஆணையிட்டார். ஸ்ரீ குருவை பற்றி நான் கூற வேண்டுமா? என்ன வென்று சொல்வது! எப்படி சொல்வது!

சரியாக தமிழ் கூட நமக்கு பேசத் தெரியாதே! அப்படியிருக்க ஆதிகுருவான ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரைப் பற்றி என்னவென்று விவரிப்பது என்று அவரிடமே கேட்டபோது, “நானே அச்செயலை செயல்படுத்துவேன்” என்று ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் உறுதிமொழி அளித்தார்.

“கிருத யுகத்திற்கு ஜனார்த னான ஸ்ரீ மஹாவிஷ்ணு, த்ரேதா யுகத்திற்கு ஸ்ரீ ராமன், துவாபர யுகத்திற்கு ஸ்ரீ

கிருஷ்ணன், கலியுகத்திற்கு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல் லபர் கடவுளாக துதிக்கப்ப டுவர்" என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது. இந்த வாக்கு உண்மையாகும் விதத்தில் ஸ்ரீ லலிதா அம்மாவின் வாழ்க்கையில் நிகழ்ச்சிகள் அரங்கேறின.

பாஷை தெரியாத ஊரில் வாழ்ந்து கொண்டு, எப்படி ஒரு குருவைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது? உந்துதலைக் கொடுத்த குரு, அதற்கான வழியையும் ஏற்படுத்திக் கொண்டார். 2015 ஆம் ஆண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைக்கிணங்க "ஸ்ரீபாத ஸ்ரீவல்லப அறக்கட்டளை" துவங்கப்பட்டது. அதன் மூலம் பல நற்காரியங்கள் செய்யத் துவங்கினார்.

அதே வருடத்தில் தான் வசித்து வரும் சென்னை பல்லாவரம் பகுதியில் "ஸ்ரீ தத்தாத்திரேயர் நிலையம்" அமைத்து, ஒவ்வொரு மாதமும் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஜென்ம நட்சத்திரமான சித்திரை நட்சத்திரத்தன்று ஸ்ரீ தத்தாத்ரேயர் ஹோமம், சீதா ராம கல்யாணம், விளக்கு பூஜை மற்றும் சுமங்கலி பூஜை போன்ற பல்வேறு பூஜைகளை செய்யத் தொடங்கினார். ஸ்ரீ தத்த ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்து, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மற்றும் ஸ்ரீ தத்த அவதாரங் களின் மகிமைகளை எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார்.

ஸ்ரீபாத ஸ்ரீவல்லபருக்கு திருக் கோயில் கட்ட வேண்டும் என்று சங்கல்பம் எடுத்துக் கொண்டு, அதற்கான இடம் தேடிக் கொண்டி ருந்தார். இடம் காண்பிக்க வேண்டும் என்கிற விண்ணப்பத்துடன் கோடி



லலிதா ஸஹஸ்ரநாம பாராயணத்தை துவங்கினார். அச்சமயத்தில் அவருடைய வீட் டுக்கு அருகில் இருக்கும் சிவன் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டபோது, "நான் உனக்கு எப்போது கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்வேன்!" என்று ஸ்ரீபாதரிடம் கண் மூடி பிரார்த்தனை செய்து கொண்டார்.

அப்போது ஒரு பிராமணர் ஸ்ரீ லலிதா அம்மாவிடம் வந்து, "நாங்கள் ஒரு ஊருக்கு உழவாரப் பணி செய்வதற்காக செல்ல இருக்கிறோம், நீங்களும் எங்களுடன் வருகிறீர்களா? ஏனோ உங்களை அங்கு அழைத்துச் செல்ல வேண்டும் போல் எனக்கு தோன்றுகிறது" என்று கூறியவுடன் அம்மா அவருடன் செல்ல சம்மதித்தார்.

10.09.2017 அன்று அவர்கள் அழைத்துச் சென்ற இடம்தான்

மேல்சிறுனை கிராமம். அப்போது அவ்வூரில் வயலுக்கு நடுவே இருந்த ஆயிரம் வருட பழமையான சிவலிங்கத்தை கண்டெடுத்தார்.

சிதிலமடைந்து இருந்த சிவலிங் கத்தை மீட்டெடுத்து விளக்கேற்றி வழி பட்டுவிட்டு அங்கிருந்து கிளம்பி சென்று விட்டார். அன்று இரவு அவ ருடைய கனவில் காஞ்சி மகாபெரியவர் தோன்றி அம்மாவின் கையைப் பிடித்து சிவபெருமானிடம் அழைத்துச் சென்று, "முதலில் இந்த சிவனுக்கு ஆலயம் எழுப்பு. பின்னர் தத்தாத்ரேயருக் கான இடம் தானாகக் கிடைக்கும்" என்று கூறி அருளினார்.

அதைக் கட்டளையாக ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து மூன்று ஆண் டுகள் மேல் சிறுனை கிராமத்திற்கு பயணம் செய்து, அங்குள்ள மக்களை சம்மதிக்க வைத்து சிவனுக்கு கோவில் கட்டும் பணியை தொடங்கினார். சிவனை கண்டெடுத்தாலும், அவ்வூரில் எந்த திருநாமத் துடன் எழுந்தருளி யிருக்கிறார் என்பது அவ்வூரார்கள் எவருக்கும் தெரியவில்லை. அதற்காக தெய்வ பிரசன்னம் பார்க்க காஞ்சிபுரம் சென்றார்.

பிரசன்னத்தில், அந்த சிவன் 1000 வருடங்களுக்கு மேல் பழமையானவர் என்றும், அவருடைய பெயர், "அக்ஷய லிங்கேஸ்வரர்" என்றும் வந்தது. மேலும், இங்கு கோவில் எழுப்ப ஒரு பெண் அங்கு வருவார்கள், அந்த இடத்தில் ஸ்ரீ தத்தாத்ரேயர் கோவில் மிகவும் பிரசித்தி பெரும் என்றும் வந்தது.

அதன்படி ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைக் கிணங்க,17.07.2018 அன்று ஸ்ரீ தத்தாத்ரேயரின் பாதுகையை பிரதிஷ்டை செய்தார்.

28.10.2018 அன்று ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மற்றும் ஸ்ரீ அக்ஷயலிங் கேஸ்வர் கோவில்கள் கட்டுவதற்கான பாலாலயம் செய்தார். கோவில் கட்டுமானப் பணி 13.2.2019 அன்று துவங்கியது. ஒரு பெண்ணாக, சரியாக தமிழ் கூட பேசத் தெரியாமல், பல்வேறு சிரமங்களுக்கு இடையே கோவில் கட்டும் பணி சிறப்பாக நடந்து முடிந்தது.

ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மற்றும் அக்ஷயலிங்கேஸ் வரரின் அருளால் பல பக்தர்களின் அருட்கொடை யால், 12.2.2020 அன்று கும்பாபிஷேகம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

ஸ்ரீ லலிதாம்பிகா சமேத ஸ்ரீ அக்ஷயலிங்கேஸ்வரர், ஸ்ரீ விநாயகர், முருகன் மற்றும் பால துர்க்கை ஆகிய தெய்வங்களின் சிலைகள் அங்கு பிரதி ஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர், ஏகமுக தத்தாத்ரேயர், ஸ்ரீ சாய்பாபா ஆகிய சிலைகள் தனியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் வருடங்களுக்கு முன் ஸ்ரீ அக்ஷயலிங்கேஸ்வரரின் கோவில் தலம், தீர்த்தம் மற்றும் மூர்த்தியாக விளங்கியிருக்கிறது. "அக்ஷயம்" என்றால் குறையாத என்பது பொருள். இந்த சிவபெருமானை வணங்குவதால், அள்ள அள்ள குறையாத நன்மைகள் ஏற்படும். செல்வம், இன்பம், பொருள், பக்தி, ஜலம், சுகபோகம், ஆனந்தம் ஆகிய அனைத்தும் எந்த குறையும் ஏற்படாமல் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

அக்ஷய திருத்தியை அன்று இக்கோவிலில் பித்ரு காரியங்கள் மேற்கொள்வதால், இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடைவதோடல்லாமல், தானதர்மங்கள் செய்பவர்களுக்கும் பல நற்பலன்கள் கிடைக்கும். இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள நாகர்களின்

அருளாலும் அக்ஷயலிங்கேஸ்வரரின் அனுகிரஹத்தினாலும் நாகதோஷம் நிவர்த்தியாகும். அனைவரும் மேல் சிறுனை கிராமத்திற்கு வந்து, அள்ள அள்ள குறையாத அனுக்கிரதை பெற்றுக் கொள்ள வேண்டும்!

கலியின் கோரத்தாண்டவம் அதிகரிக்கும்போது, அதன் சீற்றங்கள் மிகவும் அதிகமாக இருக்கும். அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், மக்கள் பல்வேறு விதமான வழிபாட்டு முறைகளை கடைபிடிக்க வேண்டும். அதில் முக்கியமான ஒரு முறை என்னவென்றால் மந்திர உச்சாடனம்.

திகம்பரா! திகம்பரா! ஸ்ரீ பாத வல்லப திகம்பரா! திகம்பரா! திகம்பரா! ஸ்ரீசக்ர தத்தாத்ரேய திகம்பரா!

என்கிற இந்த மந்திரம் ஸ்ரீ லலிதா அம்மாவுக்கு ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரால் உபதேசம் செய்யப்பட்டது. சத்ய யுக ஸ்தாபனம், உலக நன்மை மற்றும் பாதுகாப்புக்காக அனைவரும் இந்த மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டும் என்பது ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணை.

பூமண்டலத்தின் நாபி ஸ்தானம் காஞ்சிபுரம். பழைய சுவடுகளில் காஞ்சிபுரத்தை ஸ்ரீசக்ரபுரம் என்று அழைக்கின்றனர். எப்படி குருக்ஷேத்திர போருக்கு ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தாரோ அதே போல ஸ்ரீ பாதஸ்ரீ வல்லபர் உலக நன்மைக்காக தேர்தெடுத்த இடம்தான், காஞ்சிபுரம் மேல்சிறுனை.

23.02.2020 அன்று ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ சாய் பீடத்தின் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டது. சத்யயுக ஸ்தாபனத்திற்காகவும் உலக நன்மைக்கான பணிகளை மேகொள்வதே இந்த பீடத்தின் பிரதான நோக்கம். ஸ்ரீ தத்தாத்ரேயர் மற்றும் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணைப்படி ஸ்ரீ சக்ர தியான பீடம் உருவாக்கப்பட வேண்டும். இவ்விடத்தில் 1 கோடி ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். அப்போது ஸ்ரீசக்ரத்தில் அம்பாளுக்கு பதிலாக ஸ்ரீ தத்தாத்ரேயர் இருப்பார். அதற்கான பணி இப்போது துவங்கிவிட்டது.

30.05.2021 அன்று ஸ்ரீ லலிதா அம்மாவுக்கு ஸ்ரீ வல்லபானந்தமயி என்று அவருடைய குரு ஸ்ரீ தத்த கோபாலகிருஷ்ண சர்மாவால் தீக்ஷா நாமம் அளிக்கப்பட்டது.

ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் சித்திரை நட்சத்திரத்தில், விநாயக சதுர்த்தியன்று பிறந்தார். ஒவ்வொரு வருடமும் விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீபாத ஸ்ரீவல்லப ஜெயந்தி அனுஷ்டிக்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு ஸ்ரீபாத ஸ்ரீவல்லப ஜெயந்தியன்று (10.09.2021) ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ



பாத ஸ்ரீ சாய் பீடத்தில் 1.ஸ்ரீ வல்லப கணபதி 2.ஸ்ரீ தத்தர் 3.ஸ்ரீ செங்காளம்மன்

4.ஸ்ரீ நாகம்மன் ஆகிய சிலைகளின் பிரதிஷ்டை விமரிசையாக நடை பெற்றது. ஸ்ரீபாதரின் ஆக்ஞைப் படி தனியாக சந்நிதி கட்டப்பட்டு, சிலாப்பிரதிஷ்டை சிறப்பான முறையில் நடைபெற்றது. 2021 ஆம் ஆண்டு தத்த ஜெயந்தி வைபவம் ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த விழாவாக அமைந்தது. அன்று, 1.ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் 2. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லப பாதுகை

3. சர்வ ரக்ஷ ஸ்ரீ சக்ரம் 4. ஸ்ரீவர சித்தி சாய்பாபா 5.ஸ்ரீசக்ர தத் தாத்ரேயர் ஆகிய விக்ரகங்களின் பிரதிஷ்டை நடைபெற்று, கும்பாபி ஷேகம் நடை பெற்றது. உலகிலேயே வேறெங்கும் இல்லாத ஸ்ரீசக்ர தத்தாத் ரேயர் இங்கு மக்களுக்கு அருள் பாலித்து வருகிறார். ஸ்ரீ பரசுராமருக்கு ஸ்ரீசக்ர உபாசனை ஸ்ரீ தத்தரால் செய்யப்பட்டது.

ஒவ்வொரு சிலாப்பிரதிஷ்டா னத்திற்கும் ஒருபிரத்யேகமான காரணம் இருக்கிறது. உலக நன்மைக்காக ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் இந்த இடத்தை தேர்ந்தெடுத்து அதன் மகத்துவத்தை இந்த பிரதிஷ்டாபனங்கள் மூலம் அதிகரிக்கின்றார்.

ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பல சிலாப்பிரதி ஷ்டானங்கள் மூலம் இந்த புண்ணிய க்ஷேத்திரத்தை சக்தியூட்டிய பின்னர், அனைத்து குருமார்களின் பாதுகைகளை யும் இந்த பீடத்திற்கு வர ஏற்பாடுகள் செய்தார்.

29.01.2022 அன்று ஸ்ரீ மாதா வல்லபானந்த மயி அவர்கள் மஹாராஷ் டிர மாநிலத்தில் உள்ள அக்கல்கோட் சென்று ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தரின் பாதுகையை பெற்றுக் கொண்டார்.

02.04.2022 அன்று ஸ்ரீ மாதா வல்லபானந்த மயி அவர்கள் மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள பூஸ்வாலிலிருந்து ஸ்ரீ தத்தாத்ரேயரின் பாதுகையை பெற்றுக் கொண்டார்.

03.04.2022 அன்று ஸ்ரீ மாதா வல்லபானந்த மயி அவர்கள் கர்நாட காவில் உள்ள மாணிக் நகரில் அமைந்திருக்கும் மாணிக் பிரபு சமஸ்தானம் ஆசி பெற்ற ஸ்ரீ மாணிக் பிரபுவின் பாதுகையை பெற்றுக் கொண்டார். அன்றைய தினமே கர்நாடகா மாநிலத்திலுள்ள கானகாபூர் சென்று, ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியின் பாதுகையை யும் பெற்றுக் கொண்டார்.

01.05.2022 அன்று ஸ்ரீ மாதா வல்லபானந்த மயி அவர்கள் ஷெகாவ் சென்று ஸ்ரீ கஜானன் மஹராஜுடைய பாதுகையை பெற்றுக் கொண்டார்.

பாதுகைகள் சென்னை வந்தடைந்த பின்னர், அக்கல்கோட் மஹராஜ் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி , ஸ்ரீ மாணிக் பிரபு மஹராஜ் ஆகியோரின் சிலாப்பிரதிஷ்டாபனம் மற்றும் கும்பாபிஷேகத்திற்காக 24.06.2022 அன்று நாள் குறிக்கப்பட்டது.

அன்று சிலாப்பிரதிஷ்டாபனம் மற்றும் அனைத்து பாதுகைகள் பிரதி ஷ்டையும் சிறப்பான முறை யில் நடைபெற்றது. காஞ்சி மகாபெரிய வாளின் பாதுகையும் அங்கு வந்து சேர்ந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஸ்ரீசக்ர தத்தாத்ரே யருக்குஅருகிலேயே ஸ்ரீ அனகா தேவியுடைய சிலா பிரதிஷ்டை நடை பெற்றது.

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரியின் சிலாபிரதிஷ்டா பனம் நடைபெற்றது.

**காஞ்சிபுரம் மேல்சிறுனை ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ பாத ஸ்ரீ சாய் பீடத்தின் மகத்துவங்கள்**

1.ஸ்ரீ சக்ர தத்த பீடத்தில் மிகவும் அரிதான ஏகமுக தத்தாத்ரேயரின் தரிசனத்தை பெறலாம். ஸ்ரீ தத்தாத் ரேயர் அத்ரிஅனசூயாவுக்கு மகனாக இருந்தபோது ஏகமுகத்துடன் விஷ்ணு ரூபனாக இருந்தார்.

2.உலகிலேயே வேறெங்கும் இல்லாத ஸ்ரீ அனகா தேவி சமேத ஸ்ரீசக்ர தத்தாத்ரேயர் இங்கு மட்டுமே அமைந்திருப்பது இவ்விடத்தின் சிறப்பம்சம்.

3.கலியுகத்தின் அனைத்து தத்த அவதாரங்களின் திவ்ய ரூபங்கள் மற்றும் பாதுகைகளை ஒரே இடத்தில் தரிசனம் செய்யலாம்.

4.ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த ஸ்ரீ லலிதாம்பிகா சமேத அக்ஷ யலிங்கேஸ் வரரின் தரிசனம் பெற்று குறையாத செல்வத்தை பெறலாம்.

5.ஒவ்வொரு வியாழக்கிழமையும் நடைபெறும் கிர்னார் துனியில் கலந்து கொண்டு புண்ணியம் பெறலாம்.

இந்த துனியானது அனைவருடைய பாவங்களையும் பொசுக்கும் சக்தி வாய்ந்தது. (கிர்னார் குஜராத் மாநிலத் தில் அமைந்துள்ள தத்தாத் ரேயரின் முக்கியமான க்ஷேத்திரம். அங்கு ஒவ்வொரு திங்கட்கிழமையும் எந்தவித முயற்சியும் இல்லாமல் துனி தானாகவே எரியத் தொடங்கும் ஆச்சரியம் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது).

6. ஒவ்வொரு வியாழக்கிழமையும் சிறப்பான முறையில் அன்னதானம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் பங்குகொண்டு புண்ணியம் பெறலாம்.

மேலும் அனைத்து தத்த குருக் களின் சரித்திரமும் தமிழ் மொழியில் ஸ்ரீ சக்ர தத்த பீடத்தில் கிடைக்கும். அவற்றை வாங்கி பாராயணம் செய்வ தால் கிடைக்கும் நன்மைகளை வார்த்தைக ளால் வர்ணிக்க முடியாது.

பக்தர்கள் அனைவரும் காஞ்சி புரம் மேல்சிறுனை கிராமம் வந்து தரிசனம் செய்து புண்ணியம் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்!

**ஸ்ரீ சக்ர தியான பீடம்**

ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் எதிர்கால திட்டத்திற்காகவும், சத்யயுக ஸ்தாபனத்திற்காகவும் உருவாக்கப்பட்ட இந்த இடத்தில் ஸ்ரீ சக்ர தியான பீடம் அமைய வேண்டும் என்பது ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் ஆணை. அதற் கான பணிகளை அவர் இப்போது தொடங்கியுள்ளார். அவ்விடம் எப்படி அமைய வேண்டும் என்று அவர் சில ஆணைகள் பிறப்பித்துள்ளார். அதன்படி,

*அனைத்து பக்தர்களாலும் பூஜை செய்து கொடுக்கப்படும் ஒரு கோடி ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

*16 அடி உயரம் கொண்ட ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

*ஒரே நேரத்தில் 2498 பக்தர்கள் 16 அடி உயர ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் முன்னால் அமர்ந்து கொண்டு தியானம் செய்ய தியான கூடம் அமையவிருக்கிறது.

*இந்த சிறப்பான வரலாற்று மிக்க கைங்கர்யத்தில் அனைவரும் பங்கேற்று ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் அருளாசியை பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**திகம்பரா! திகம்பரா! ஸ்ரீ பாத வல்லப திகம்பரா! திகம்பரா! திகம்பரா! ஸ்ரீசக்ர தத்தாத்ரேய திகம்பரா!**

# இரண்டு பொக்கிஷங்கள்

பகவான் சாயிநாதரின் பக்தர்களுள் மிகச்சிறந்த பக்தரான பூஜ்ய ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் அவர்கள் 1903 ஆம் "குரு பாடாசே அபாங்" என்னும் குருவினைப்பற்றிய சிறப்புகளைக் கூறும் 25 பாடல்களை மராட்டியில் இயற்றினார்.

இன்றளவும் சீரடியில் இந்தத் துதிகள் பாடப்பட்டு வருகின்றன. இந்த அற்புதமான துதிகளை, திரு.டி.ஆர். மாதவன் அவர்களும், ஸ்ரீமதி. நம்ரதா பாத்டே அவர்களும் ஹிந்தியில் இருந்து தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றார்கள். தமிழ் மொழி பெயர்ப்பு சீர்த்திருத்தங்களை நமது ஆசிரியர் திரு. வீ.ஸ்ரீராம் அவர்கள் செய்திருக்கின்றார்கள்.

சாயி பக்தியில் மெய்யான முன்னேற்றத்தினை நீங்கள் அடைய வேண்டுமானால், நீங்கள் அவசியம் வாசிக்க வேண்டியது இந்த குருபாட துதிகள் என்ற நூலை.

குருவின் பெருமைகளையும், அவரை அடைய வேண்டிய வழிமுறைகளையும், அவருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளையும் மிகச்சிறப்பாக பதிவு செய்துள்ளார். திரு. தாஸ்கணு மகராஜ் அவர்கள்.






உருவமற்ற இறைவனை நாம் உணர வேண்டுமானால் உருவமுள்ள குருவை நாம் அடைய வேண்டும். நீ அடைந்த குருவும், உன்னுடைய சரணாகதியும் உண்மையானால் " குருவே திருவாகும்" என்பதை அழுத்தம் திருத்தமாக உணர்ந்து எழுதப்பட்ட இக்கவிதாமிர்தத்தை அனைவரும் அருந்திக் களிப்போமாக! இந்நூலின் விலை ரூ.50 + கொரியர்

பகவான் சாயிநாதரால் ஹேமாட் பந்த் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீ கோவிந்தராவ் ரகுநாத் தபோல்கர் அவர்கள் இயற்றிய ஸ்ரீ சாயி சத்சரித்ரா என்ற புத்தகத்தை தழுவி ஸ்ரீ சிவ நாராயணன் அவர்கள் தாள வடிவில் பாடுவதற்கு வசதியாக இந்தியில் 51 அத்தியாயங்களில், 2711 ஈரடிப்பாடல்களாக இயற்றியுள்ளார்.

இந்நூலை சீரடி சாயி சனஸ்தான் 2006 ஆம் ஆண்டு வெளியிட்டது. இதுவரை பலமுறை மறுபதிப்புகளைக்



கண்டிருக்கிறது. அதுமட்டமின்றி இப்பாடல்களை சீரடி சாய் சனஸ்தான் ஹிந்தியில் இசைத்தட்டாகவும் வெளியிட்டுள்ளது.

இசைக்கேற்ப தாள லயத்துடன் பாடுவதற்காக எளிமையான சுலபமான வார்த்தைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உன்னதமான இந்நூலை, நமது மரியாதைக்குறிய திரு.டி.ஆர் மாதவன் அவர்கள் தமிழ் பக்தர்களுக்காக "ஸ்ரீ சாயி சத்சரித சாரம்" என்ற தலைப்பில் சிறப்பாக மொழிமாற்றம் செய்து வெளியிட்டிருக்கின்றார்.

அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய நூல். நூலின் விலை ரூ.400 + கொரியர்

இவ்விரு நூல்களும் தேவைப்படுவோர் கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தங்களது முகவரியை தெரிவித்து விபரம் பெறலாம்.

**திரு.வீ.ஸ்ரீராம்:** 99418 16692

**திரு.டி.ஆர்.மாதவன்:**72878 00164

**கோதை பதிப்பகம்:** 90808 70936

சீரடியிலும் புத்தகம் கிடைக்கும்

தொடர்புகொள்ள வேண்டிய

எண்: 89256 86780.


**எளியவரும், இனியவருமான எங்களது அன்பு குரு அவர்களின் "சாயி மகராஜ் குருவை தேடி" மாத இதழின் 6 ஆண்டு விழாவிற்கு அடியேனின் ஆத்மார்த்தமான வாழ்த்துக்கள். உங்களது சாயி சேவா மேன்மேலும் உயர்ந்து சீறக்க பகவான் சாய்நாதரை பிரார்த்திக்கின்றேன்.**



அன்புடன்,

**சாயி சேவகன் எஸ். உமா சங்கர்**

**பாடி, சென்னை-50**

# எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES










GS Caltex
Castrol

**P.Sivasaravanan B.E.,**
**98434 40806**

## Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.



HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

# நன்றி! நன்றி! நன்றி!




**1.05.2018** மே மாதத்தில் இருந்து பகவான் சாயிநாதரின் ஆசீர்வாதத்தால் "சாயி மகராஜ் குருவை தேடி" என்று ஆரம்பித்த எங்களது பயணம் சென்ற மாதத்துடன் வெற்றிகரமாக ஐந்து ஆண்டுகளை முடித்து கொண்டு இம்மாதம் ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

பத்திரிக்கை நடத்துவதென்பது மிகவும் கடினம். அதிலும் ஆன்மீகப்

பத்திரிக்கை என்பது அதனிலும் கடினம். தொடர்ந்து நடத்துவது என்பது கடினத்திலும் கடினம். ஆனால் பகவான் சாயிநாதரின் கருணை இருந்தால் கடினம் என்ற வார்த்தைக்கு அர்த்தமேயில்லை.

பத்திரிக்கை ஆரம்பித்ததில் இருந்து உங்களால் பத்திரிக்கை நடத்த முடியாது என்று எங்களுக்கு ஊக்கம் அளித்த மறக்க முடியாத நண்பர்களுக்கு மிக்க நன்றி! யார் என்ன கூறினாலும் என் மேல் நம்பிக்கை வைத்து தொடர்ந்து நம் பத்திரிக்கைக்கு உதவி வந்த நல்ல உள்ளங்களுக்கு நன்றி! நன்றி!



தன்னலம் கருதாது, பொதுநலன் கருதி பகவான் சாயிநாதரின் நற்கருத்துக்களை தாங்கிவரும் நமது இதழ் எக் காரணம் கொண்டும் தடை பட்டுவிடக்கூடாது என்று, தன் பெயரை வெளியிடக்கூடாது என்று அன்பு கட்டளையுடன் தொடர்ந்து மாதாமாதம் பொருளாதார ரீதியாக உதவி வரும் மாமனிதர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன்.



தான் மட்டும் புத்தகத்தை படித்தால் போதாது அனைத்து சாயி பக்தர்களும் இதழைப் படித்து பயன் பெற வேண்டும் என்று தனது சொந்த செலவில் சாயி பக்தர்களுக்கு புத்தகத்தை வாங்கி அனுப்பி வைக்கும் நல்ல உள்ளங்களுக்கும், கடுமையான வேலைகளுக்கு நடுவேயும் நமது இதழுக்கு சந்தா சேகரித்து அனுப்பும் அனைத்து பாபா சேவகர்களுக்கும் மீண்டும், மீண்டும் நன்றியினைக்கூறி இன்று போல் என்றும் உங்களது ஆதரவு நமது "சாயி மகராஜ் குருவை




தேடி" இதழுக்கு வேண்டும் என்பதை வேண்டிவிரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

கடுமையான கொரானா காலகட்டத்திலும் தொடர்ந்து நமது இதழ் வெளிவரக்காரணமாக இருந்த, இன்று வரை இருந்து கொண்டிருக்கின்ற அனைத்து சாயி பக்தர்களுக்கும், சாயி தொண்டர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினர் அனைவரும் பகவான் சாயிநாதரின் அருளால், நீள் ஆயுள் நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம் பெற்று நீடூடி வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி மகிழ்கிறோம்.

**அனைவருக்கும்...**

**நன்றி! நன்றி! நன்றி!**



**வாழ்க வளமுடன்!**

**வாழ்க வையகம்!**

# "ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப தீகம்பரா"


"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா தீகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

# "ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

# ரமண மந்திரம்



ஒருமுறை பால் ப்ரண்டன் என்பவர் ரமண மகரிஷியை சந்திக்கச் சென்றார். ரமணாசிரமத்தின் ஒரு சிறிய ஹாலில் ரமண மகரிஷி அமர்ந்திருக்க, அவர் முன் சிலர் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

ரமண மகரிஷி பால் ப்ரண்டனைப் பார்த்தார். மிகச் சாதாரணமான தோற்றம் கொண்ட ரமண மகரிஷியின் பார்வை சாதாரணமானதாக இருக்க வில்லை.அவர் பார்வை காந்தத் தன்மை கொண்டதாக இருந்தது.

பால் ப்ரண்டன் தன் பார்வையை மகரிஷியிடமிருந்து விலக்க முடியாதவ ராக இருந்தார். திடீரென்று தன் பார்வையை பால் ப்ரண்டனிடமி ருந்து விலக்கிக் கொண்டு மகரிஷி வெற்றிடத்தைப் பார்க்க ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் பால் ப்ரண்டன் தான் புறக்கணிக்கப்பட்டது போல் உணர்ந்தார்.அங்கு அமர்ந்திருந்த மற்றவர்களுடன் தானும் உட்கார்ந்து கொண்டார். சிறிது நேரத்தில் ஒருவித அசாதாரண சக்தி அலை அவரை ஆட்கொண்டது. தன்னை மகரிஷி புறக்கணித்ததாக எண்ணிய எண்ணம் மெல்ல,மெல்ல விலகியது. ரமண மகரிஷி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாலும், அவருடைய ஞான சக்தி அந்த இடமெல்லாம் வியாபித்து கொண்டிருந்ததைப் பால் ப்ரண்டன் உணர்ந்தார்.

அவர் மனதில் ரமண மகரிஷியிடம் கேட்க எண்ணியிருந்த கேள்விகள் கூட அவர் மனதில் இருந்து தானாக உதிர்ந்தன. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பேரமைதியை பால் ப்ரண்டன் அந்த இடத்தில் உணர்ந்தார்.

எதனாலும் பாதிக்கப்படாத ஒரு ஆனந்த நிலையை பால் ப்ரண்டன் அனுபவித்தார்.மற்றவர்கள் காட்டிய அபார சக்திகள் எல்லாம் இந்த அமைதியின் முன் ஒரு பொருட்டாகவே பால் ப்ரண்டனுக்குத் தோன்றவில்லை.

தான் தேடி வந்த யோகியை அந்தக் கணமே பால் ப்ரண்டன் அடையாளம் கண்டார் அவருடைய தேடல் முடிவுக்கு வந்ததாக அவர் உணர்ந்தார் அங்கேயே சில காலம் தங்க பால் ப்ரண்டன் தீர்மானித்தார்.

முதல் முதலில் ரமண மகரிஷியிடம்

பேச வாய்ப்பு கிடைத்த போது பால் ப்ரண்டன் கூறினார் "ஸ்வாமி, நான் மேலை நாட்டுத் தத்துவங்கள் நிறையப் படித்தவன் அவற்றில் உள்ள கருத்துக்களை ஆழமாகத் தனிமையில் சிந்தித்தவன் மேலை நாடுகளின் சொகுசான வாழ்க்கையின் பிடியில் அகப்பட்டு ஆன்மீகத் தேடல்களை மறந்ததும் உண்டு. ஒரு கட்டத்தில் அந்தத் தத்துவங்களில் பல கேள்விகளுக்குப் பதில் இல்லை என்று உணர்ந்து கீழை நாடுகளின் பக்கம் என் கவனம் திரும்பியது."

மகரிஷி புரிகிறது என்பது போல் தலையசைத்தார்.

பால் ப்ரண்டன் தயக்கமில்லாமல் தனக்கு மனதில் பட்டதை அப்படியே சொன்னார் "இங்கும் பல தத்துவங்கள், பல சித்தாந்தங்கள், பல வாதங்கள் எல்லாம் ஏராளமாக இருக்கிறது.

இதையெல்லாம் கேட்டும் படித்தும் நான் சலித்து விட்டேன். நான் மதவாதி அல்ல, மதங்கள் என்ன சொல்கின்றன என்பதை அறிவதும் என் நோக்கமல்ல.

நம் கண்ணிற்குத் தெரிகிற இந்த மனித வாழ்க்கைக்கு அப்பாலும் ஏதாவது இருக்கிறதா, இருந்தால் நான் அதை அடைவது எப்படி.

அருகிலிருந்த சிலர் பால் ப்ரண்டனுடைய வெளிப்படையான கேள்வியைக் கேட்டு திகைத்தனர்.

மகரிஷி அவரையே பார்த்தாரே ஒழிய பதிலேதும் சொல்லவில்லை.

பால் ப்ரண்டன் தொடர்ந்து தன் கருத்தைச் சொன்னார். "அறிவுக்குப் பெயர் போன எங்கள் விஞ்ஞானிகள் கூட, இந்த விஷயத்தைப் பொறுத்தவரை அறிந்தது குறைவு என்று கைவிரித்து விட்டார்கள். உங்கள் புண்ணிய தேசத்தில் இதற்கான பதிலை நான் தேடி வந்திருக்கிறேன்

தயவு செய்து சொல்லுங்கள் மெய் ஞானம் பெற நீங்கள் எனக்கு உதவ முடியுமா? இல்லை நான் தேடி வந்ததே வெறும் கானல் நீரா? இதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு மகரிஷி கேட்டார். "நீங்கள் நிறைய முறை "நான், நான்" என்று கூறினீர்கள். இப்போது எனக்குச் சொல்லுங்கள் "யார் அந்த நான்".

மகரிஷியின் கேள்வி பால் ப்ரண்டனுக்கு விளங்கவில்லை.

இதென்ன கேள்வி என்று நினைத்தவர் தன்னைக் கையால் சுட்டிக் காட்டி தன் பெயரைச் சொல்லி இது தான் நான் என்று சொன்னார்.

"இது உங்கள் உடல் மீண்டும் கேட்கிறேன். 'யார் அந்த நான்". இப்போது பால் ப்ரண்டனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

மகரிஷி சொன்னார் "அந்த நானை அறியுங்கள். உங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் உடனடியாக விடை கிடைக்கும்"

"அதை எப்படி அறிவது"

"உங்களுடைய உண்மைத் தன்மையை ஆழமாக சிந்திப்பதாலும் இடைவிடாத தியானத்தாலும் அறியலாம்".

"நான் நிறையவே தியானம் செய்திருக்கிறேன்.ஆனால்
எந்த முன்னேற்றமும் எனக்குத் தெரியவில்லை"

"ஆன்மீக மார்க்கத்தில் முன்னேற்றம் என்பதை எளிதாகக் கண்டு பிடிக்க முடியாது"

"இதில் ஒரு குரு தேவையா"?

"இந்த தேடலுக்குத் தேவையான



வற்றை குரு தரலாம். ஆனால், இதை அவரவரே தனிப்பட்ட அனுபவத்தால் தான் உணர முடியும்"

"இதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும்"?

"இது தனி மனிதர்களின் பக்குவத்தைப் பொறுத்தது. தீப்பிடிக்க வெடி மருந்துக்கு நொடி நேரம் போதும்.

ஆனால், நிலக்கரிக்குத் தீப்பிடிக்க அதிக நேரம் தேவைப்படுகிறது"

பால் ப்ரண்டன் பல கேள்விகளுக்குப் பின், உலகத்தின் தற்போதைய மோசமான நிலையைப் பற்றிச் சொல்லி உலகின் எதிர்காலத்தைப் பற்றிக் கேட்டார். "உலகத்தைப் படைத்தவனுக்கு அதை எப்படி பாதுகாப்பதென்று தெரியும்.

அந்தப் பாரம் அவனைச் சேர்ந்தது உங்களுடையதல்ல" என்றார்.

தனி மனிதனுக்கு இருக்கும் பொறுப்புகளைப் பற்றி பால் ப்ரண்டன் கேட்க, மகரிஷி சொன்னார் "நீங்கள் எப்படியோ அப்படியே உலகமும்"

உங்களை முழுமையாக அறியாமல் உலகத்தை அறிய முற்படுவது பயனற்றது. அங்கு தங்கிய காலத்தில் மகரிஷியிடமிருந்து பால் ப்ரண்டன் எத்தனையோ கற்றுக் கொண்டார்

மகரிஷி தியானத்தில் மூழ்கி இருக்கும் போது அவர் முகத்தில் தவழும் பேரமைதியைக் காணும் போதெல்லாம், 'எந்தத் துக்கமும் இந்தத் துறவியைத் தீண்டமுடியாது" என்ற உண்மை அவருள் வலுப்படும்

ஒரு முறை பால் ப்ரண்டன் ரமண மகரிஷியிடம் பேசும் போது சொன்னார். "குருவே இந்த ஆன்மீகப் பாதை மிகவும் கடினமானது. சில நேரங்களில் என்னுடைய பலவீனங்களை நான் நன்றாக உணர்கிறேன்."

"அப்படி பலவீனமானவன் என்று நினைப்பதே பல சமயங்களில் நமது குறைபாடு" என்றார் மகரிஷி.

"ஒருவேளை அது உண்மையாக இருந்தால்"?

"அது உண்மையல்ல" மிகவும்

உறுதியுடன் வந்தது மகரிஷியின் பதில் "மனிதன் இயற்கையிலேயே பலம் வாயந்தவன். தெய்வீகத் தன்மை கொண்டவன். தீமையும் பலவீனமும் அவன் எண்ணங்களால் ஏற்படுகின்றனவே ஒழிய உண்மையான இயல்பால் அல்ல"

இதை அவர் உண்மையாகவே நம்பினார் என்பதற்கு ஆதாரம் அவர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி

அவரைப் போன்ற ஒரு சித்தர் செல்வத்தை நிறைய குவித்து வைத்திருக்கலாம் என்று நம்பிய ஒரு கொள்ளைக் கூட்டம் ஒரு இரவு அவர் ஆசிரமத்திற்குள் நுழைந்து தேட,

எந்த செல்வமும் அங்கு இல்லை என்றறிந்தவுடன் ஏற்பட்ட கோபத்தில் ரமணரையும் மற்ற ஆசிரமத்தில் இருந்தவர்களை அடித்து உதைத்து விட்டு செல்லும்போது, திருடர்களிடம் உணவு அருந்திவிட்டுச் செல்லுமாறு அவர்களை வேண்டியிருக்கிறார். ஒரு உண்மையான யோகிக்குத் தான் இது இயலும் என்பதில் சந்தேகமென்ன?

ரமணாஸ்ரமத்தில் இருக்கும் போது பால் ப்ரண்டனுக்கு யோகி ராமையா என்னும் ஆந்திர சித்தரின் அறிமுகம் கிடைத்தது. வருடத்தில் ஒரு முறை வந்து சுமார் ஒரு மாதம் அங்கு இருந்து விட்டுப் போவார்.

அந்த சித்தர் ஒரு முறை பால் ப்ரண்டன் இருந்த அறையில் ஒரு கொடிய விஷமுள்ள நாகம் வந்து விட, பலரும் ஓடி வந்து அதைக் கொல்ல கம்புகளை எடுக்க யோகி ராமையா அங்கு வந்து அவர்களைத் தடுத்து, தன் இரு கைகளாலும் அந்த நாகத்தை எடுத்து அதை அன்புடன் பார்க்க தன் விஷ நாக்குகளை வெளியே நீட்டினாலும். அவரை தீண்டாமல் அந்த நாகம் சீற்றம் தணிந்து அவருக்கு தலை வணங்கியது. ராமையா அதை கீழே விட யாரையும் உபத்திரவிக்காமல் அந்த நாகம் அமைதியாக அங்கிருந்து சென்று விட்டது

ஆச்சரியத்துடன் "உங்களுக்குப் பயமாக இருக்கவில்லையா?" என்று பால் ப்ரண்டன் கேட்டதற்கு ராமையா கூறினார், "நான் மனதில் வெறுப்பு சிறிதும் இன்றி முழு அன்புடன் அதை அணுகியிருக்கும் போது பயப்பட என்ன இருக்கிறது?".

மனித எண்ணங்களை உணரும் சக்தி விலங்குகளுக்கும் உண்டு என் பதையும் அவை அதன்படியே நடந்து கொள்கின்றன என்பதையும் அந்த நிகழ்ச்சி தெரிவிக்கிறதல்லவா?

ரமண மகரிஷி பெரும்பாலும் மௌன நிலையிலேயே இருப்பார். அவர் முன் வந்தமர்ந்து செல்லும் பல மனிதர்களுக்கு அவர்களின் சந்தேகங்களுக்கு, அந்த வார்த்தைகளற்ற சூழ்நிலையிலும் பதில் கிடைத்தது.

சில சமயங்களில் மட்டுமே அவர் பேச இசைந்தார். பால் ப்ரண்டன் ரமண மகரிஷியைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார் "ரமண மகரிஷியுடன் பேசுவது அவ்வளவு சுலபமாக இருக்க வில்லை. காரணம் ரமண மகரிஷி யாரையும் தன் பக்தர்களாகவோ, தன்னைப் பின்பற்றுபவர்களாகவோ மாற்ற எண்ணியதில்லை.

மற்றவர்களுடைய நம்பிக்கைகளைப் பற்றியோ, கருத்துகளைப் பற்றியோ அவர் பொருட்படுத்தவில்லை.உண்மை தனி மனித அபிப்பிராயங்களுக்கு அப்பாற்பட்டது என்பதே அவர் ஞானம்.

**ஸ்ரீ ரமணார்ப்பணம்.**

தொடர் –25

சாய் சரவணன்

# "அதி தேவதை"

**ஸ்ரீ** சாயிநாதர் தன்னை நம்பி வந்தவர்களை ஒருபோதும் கைவிட்டதே இல்லை. சாயி ஓர் பிரம்ம ஞானி, அவரிடம் எதைக் கேட்க வேண்டுமோ (முக்தி) அதைக் கேட்காது, மக்கள் அனைவரும் வேலை, மனைவி, குழந்தைகள், பணம், வியாதி குணமடைய போன்ற உலக விசயங்களின் பொருட்டே பாபாவை நாடுவது சரியில்லை என்று பக்தர் ஒருவர் கூறினார்.

அதற்கு சாயிநாதர் பதில் கூறுகிறார்,

"அப்படி கூறாதே! என்னைச் சார்ந்தவர்கள் முதலில் உலகப் பொருட்களை மட்டுமே நாடி என்னிடம் வருகின்றனர். அவர்களின் ஆசையை நான் நிறைவேற்றுவேன். அவர்களின் ஆசைகள் பூர்த்தியானதும் என்னையே பின்பற்றி என்னைச் சார்ந்து இருப்பவர்களது மனதில் ஆன்மீகச் சிந்தனையை தூண்டிவிட்டு அவர்களை வாழ்வில் மேலும் முன்னேறச் செய்வேன் என்றார் பாபா".

மேலும் பாபா, திருமதி. காசிபாய் கனீட்கர் என்பவரிடம், "நான் ஒரு பிராமணன், வெண்மையான பிராமணன், தூய பிராமணன், இந்த பிராமணன் லட்சக்கணக்கான மக்களை சன்மார்க்கத்தில் ஈடுபடச்செய்து அவர்களின் இலக்கை நோக்கி இட்டுச்செல்வான். இது பிராமணனின் மசூதி என்று திருவாக்கு அருளினார்.

சாயிநாதருடைய வாக்குகள் இன்று உண்மையாகி வருவதை நாம் கண்ணார கண்டு வருகின்றோம். தன்னிடம் வரும் பக்தர்களை குழந்தைகளைப்



போன்று பாவித்து அரவணைக்கின்றார் பாபா. தீட்சித் போன்ற பக்தர்களிடம், "நான் இருக்கையில் ஏன் உங்களுக்கு, பொறுப்புகளும், கவலைகளும், அவை எல்லாம் என்னுடையதே! என்று கூறி பக்தர்களின் வாழ்வில் தாமே முன்வந்து பற்பல உதவிகளைப் புரிந்த கதைகளை சாயி வரலாறுகளில் காணலாம்.

அதே சமயம் பாபா தன் பக்தர்களின் தகுதியை சரியாக கவனித்து அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உண்டான முயற்சிகளைச் செய்கின்றார். ஒவ்வொரு பக்தர்களையும் அவர் ஒவ்வொரு விதமாக வழிநடத்துவார். தன் பக்தர்களின் தகுதியைப் பார்த்து சில அடியவர்களுக்கு குருஉபதேசம் வழிங்கியுள்ளார்.

ஓர் ஆத்மசாதகன் தன் லட்சியத்தை அடைய குருவை நாடிச்சென்று அவர் அருளால் முன்னேறுகிறான் ஆனால் கருணையே வடிவான நம் சாயிநாதரோ நம் எல்லோரையும் தேடி வந்து ஆட்கொண்டு தன் ஆசியை வழங்கி நம் வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி நமக்கு என்றும் துணையாக இருக்கிறார்.

நம் சாயிநாதரிடம் குரு உபதேசம் பெற்றே தீர வேண்டும் என்ற ஆசைப்பட்ட ராதாபாய் தேஷ்முக் என்ற பக்தையின் கதையை சத்சரிதையில் கண்டிருப்போம். அதில் பாபா நாம் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில், "எவரிடமும் உபதேசம் வாங்க முயலாதீர்! என்னையே உங்கள் செயலால், மனதால், வாக்கால் சரணடையுங்கள். பிறகு நீங்கள்ஆத்ம லட்சியத்தை அடைவீர்கள். எனக் கூறியுள்ளார்.

மேலும் ஒருவர் பாபாவிடம் பிரம்ம ஞானம் கேட்டு தொந்தரவு செய்தார். அந்த அகங்காரம் மிக்கவனுக்கும் பாபா கீழிறங்கி, " பிரம்ம ஞானம் அடைவதற்குண்டான தகுதியை" சுட்டிக் காட்டியதையும் நாம் அறிவோம். இவர்களைப்போல ஆன்மீக முன்னேற்றம் பற்றிய தகுதி தெரியாமல் இருக்கும் பலருக்கு பாபா என்றும் தன்னை மட்டுமே உபாசிக்கும்படி கூறியுள்ளார்.

ஆயினும் ஆன்மீக வளர்ச்சி அடைந்த பல பக்தர்களுக்கு " குருவாய் நின்று" உபதேசம் செய்த நிகழ்வுகளும் உண்டு. 04.03.1912 அன்று மதிய வேளையில் பக்தர்களிடம் பாபா பேசிக் கொண்டிருந்த போது அமராவதியைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ண கபர்டே அவர்களின் மனைவியிடம், " ராஜாராம் ராஜாராம்" என்ற ஜபத்தை நியமமாகச் செய். நீ மனநிறைவு அடைவாய். கணக்கற்ற நன்மைகளை அடைவாய் என்று கூறினார்.

இதேபோல் தமிழ்நாடு கோவையைச் சேர்ந்த ராஜம்மாள் என்ற பெண் மணிக்கு சாயி காயத்ரி ஜபத்தை உபதேசித்து " சிவதாயம்மா" என்ற தீட்சா நாமம் வழங்கினார். இருப்பினும் ராதாபாய் தேஷ்முக் என்ற பெண் மணிக்கு தகுதியின்மை காரணமாக உபதேசம் வழங்காது மாறாக தன் சொந்தக் கதையை கூறுவதன் மூலம் அப்பெண்மணியின் வாயிலாக நமக்கும் நன்மார்க்கம் ஒன்றை மறைமுகமாக சுட்டிக் காட்டி உள்ளார்.

கூறப்போனால் திருமதி கபர்டே, சிவதாயம்மா, இவர்கள் பாபாவின் மீது சென்ம சென்மமாக கொண்ட பக்தியின் தகுதியே இப்பிறவியில் இந்த நன்மைக்கு இட்டுச்சென்றது. இப்பாரதப் பூமியில் பகவானின் தரிசனம் கிட்டி பிறவிப்பயனை

அடைந்து ஆத்ம அனுபவம் நிலைத்து நிற்க பகவானே சற்குருவாய் வந்து தன்னுடன் ஐக்யப்படுத்திய லீலைகள் மிக அதிகம்.



சுவாமி துகாராம், நாமத்தேவர், ஜனாபாய், ராமகிருஷ்ண பரமஹம்சர், திருக்கச்சி நம்பிகள் இவர்கள் யாவரும் பகவான் அனுக்கிரகத்தால் பகவானை நேரில் காணவும் அவரோடு பேசவும், விளையாடவும் பாக்யம் கிட்டியது. இவர்கள் தன் பிறவிப்பயனை அடைந்திருந்தாலும், உலக நியதியை மீறாதபடிக்கு பகவானே சற்குருவாய் வந்து இவர்களுக்கு குரு உபதேசம் செய்து தன்னுள் தன்னை உணரும் ஆத்ம ஞானத்தை வழங்கி தன்னுடன் ஐக்யப்படுத்திக்கொண்டான் என்கிறது இவர்களது சரித்திரம்.

இவர்களைப்போன்றே நம் இராதாகிருஷ்ணமாயிக்கும் தெய்வ தரிசனம் கிட்டி திருவருளால் சற்குருவான சாயிநாதரின் அருளும் கிட்டியதை நாம் அறிவோம். ஆயினும் சற்குருவின் உபதேசம் பெறும் தகுதி பெற்ற நிலையில்தான் சீரடியில் தன் அனன்ய குரு சேவையை செய்து கொண்டிருந்தாள் ஆயி. நம் சாயிநாதர் இராதாகிருஷ்ணமாயிக்கு குரு உபதேசம் வழங்க சங்கல்பித்தார்.

சாலாவில் இரவு வேலையில் ஏகாந்த சித்தத்துடன் பிரம்மமான சாயிநாதரோடு ஒன்று கலந்த பாவத்தோடு அவரை தியானிப்பது ஆயியின் வழக்கம். அப்படிப்பட்ட ஒரு மங்களகரமான நாளாகிய 10.07.1908 ஆஷாட ஏகாதசி புண்ணிய தினத்தில் அதிகாலை வேலையில் ஆயி தனது இறைவனான சாயிநாதரின் ரூபத்தையும், அவரது திவ்ய நாமத்தையும், ஜபம் செய்தவாறு நிஷ்டையில் இருந்தாள்.

அதுவரை அன்னையின் அகத்தினுள் இருந்த பகவான் சாயி கிருஷ்ணன் புறத்தினில் காட்சி தந்தார். அன்னை தன் கண்களைத் திறந்து சாயிநாதரைக் கண்டு, பிரபு! என் சற்குருவே! என வணங்கி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தாள். சாயிநாதர் அன்னையிடம், இன்று புண்ணிய தினம். உனக்கு குருமுகமாக உபதேசம் வழங்கவே வந்தேன் எனக்கூறி ஆயியின் காதுகளில், சாயி! சாயி! சாயி! என்ற தன் திவ்ய நாமத்தை உபதேசமாக வழங்கி ஆசீர்வதித்து மறைந்து போனார்.

இராதாகிருஷ்ணமாயியால்தான் சாயி எனும் நாம ஸப்தாஹம் மற்றும் சாயி நாம ஜபம் இவ்வுலகிற்கு வழங்கப்பட்டது. இறைவனும், சற்குருவும் ஒருங்கே இணைந்த "சாயி" எனும் திவ்ய நாமம் உலகெங்கும் முழங்க வேண்டும் என்று சங்கல்பம் கொண்டாள் ஆயி. **– (தொடரும்)**

ஓம் சாய்ராம்

# வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

## "ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



**'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'**

தொடர்புக்கு;
சுந்தர்சாய், செல்: 9789404451

# சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

குருவிற்கு ஒரே மாதத்தில் அடுத்தடுத்து வருகின்ற 24 ந்தேதி திருமணநாள், 25 ந்தேதி பிறந்தநாள். ஆரம்பத்தில் இருந்தே நாங்கள் அதை பெரிதாக கொண்டாடியதில்லை. குழந்தைகள் பிறந்து பெரியவர்கள் ஆனதும், சில வருடங்களுக்கு முன்பு அவர்களாக வந்து உங்கள் திருமணநாளையும், பிறந்தநாளையும் நாங்கள் கொண்டாட விரும்புகிறோம் என்று கூற குரு அவர்கள், பிடிவாதமாக மறுத்து விட்டார்கள்.

மேலும் நமக்கு எல்லாமே பாபா தான். அவரது முக்கிய தினங்கள்தான் நமது நினைவில் இருக்க வேண்டுமே தவிர நமது பிறந்தநாள், திருமணநாள் எல்லாம் நினைவில் இருக்கக்கூடாது. நம்முடைய இன்பமும், துன்பமும், வாழ்வும், தாழ்வும் பாபாவுடனே இருக்க வேண்டும். என்றுகூறி குழந்தை களை சமாதானம் செய்துவிட்டார்.

அன்று 24 ந்தேதி புதன் கிழமை. அதிகாலையில் எழுந்து பாபாவை வணங்கி, தியானம் செய்துவிட்டு எழுகின்றோம். குருவின் தொலைபேசி ஒலிக்கிறது. "பாராயணப்பகலவன்" திரு. சுந்தர்சாய்ராம் அவர்கள் குருவை அழைத்து இப்போது வீட்டில் இருக்கின்றீர்களா என்று கேட்கிறார். குருவும் வீட்டில்தான் இருக்கின்றோம் சாய்ராம் என்று கூற, சுந்தர்சாய் அவர்கள் இன்னும் அரை மணிநேரத்தில் வீட்டிற்கு வருகிறேன். என்று கூறிவிட்டு சரியாக அரை மணிநேரத்தில் வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

வந்தவர் நேராக எங்களை அழைத்து சீரடி பிரசாதம், தேங்காய், லட்டு, உதி பாபா சால்வை என ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்துக் கொண்டே இருந்தார். மீண்டும் வேறொரு பையைத் திறந்து அதில் இருந்து விதவிதமான வட இந்திய இனிப்புகளை எடுத்துக் கொடுத்தார். இறுதியாக அவர் பையில் இருந்து எடுத்துக் கொடுத்ததுதான் சாயிலீலாவின் உச்சம்!

ஆம் நண்பர்களே! குருவிற்கு

மிகவும் பிடித்தமான வேகவைத்த வேர்கடலையை, தோல் உரிக்காமல் ஒரு பை நிறைய எடுத்து அதை குருவிடமே அளித்தார். அதை பெற்றுக் கொண்ட குரு அவர்கள் இதென்ன வேர்கடலையை வேக வைத்து எடுத்து வருகின்றீர்கள்.

நாங்கள் வேக வைத்துக் கொள்ள மாட்டோமா என்று கேட்க, திரு. சுந்தர் சாய்ராம் அவர்களோ, நேற்று நானும் எனது நண்பர்களும் சீரடியில் வாங்கி வேக வைத்தோம் அதில் என் பங்கு இது, அதை உங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று எடுத்துவந்தேன். உங்களுக்காக சீரடியில் இருந்து வேர் கடலை வந்திருக்கிறது பாருங்கள் என்றார். குருவிற்கு வேகவைத்த வேர்கடலை மிகவும் பிடிக்கும் என்பது திரு.சுந்தர்சாய் அவர்களுக்குத் தெரியாது.

அப்படியானால் நீங்கள் சீரடியில் இருந்து வருகிறீர்களா என்றார் குரு. ஆமாம், இப்போதுதான் சீரடியில் இருந்து வருகிறேன். இன்னும் வீட் டிற்குகூட போகவில்லை. விமான நிலையத்தில் இருந்து நேராக உங்கள் வீட்டிற்கு வந்து சாயி பிரசாதத்தை கொடுக்க வேண்டும் என்று தோன் றியது. அதுதான் நேராக இங்கு வந்து விட்டேன். என்றார் சுந்தர்சாய்.

அன்று எங்களது திருமணநாள் என்பதும் திரு.சுந்தர்சாய் அவர்களுக்குத் தெரியாது. குருவும், நானும், எங்களது குழந்தைகள் இருவரும், எங்களுக்கு இன்று திருமணநாள், ஆசீர்வாதம் செய்யுங்கள் என்று கூறி அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டோம்.

எங்கள் குழந்தைகள் இருவரும், பார்த்தீர்களா! நீங்கள் திருமண நாள்



கொண்டாட வேண்டாம் என்று கூறினாலும் பாபாவே சீரடியில் இருந்து உங்களுக்கு பிரசாதங்களை அனுப்பி ஆசீர்வதித்திருக்கின்றார் என்று ஆனந்தப்பட்டனர். நாங்களும் பகவான் சாயிநாதரின் கருணையை என்னி அவருக்கு நன்றி கூறினோம்.

எங்களது திருமண நாளுக்கு சாயி செய்த லீலையை பேசி பேசி அன்று முழுவதும் பேரானந்தப்பட்டோம். அதோடு விட்டுவிடுவாரா கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சாயிபிரபு. மறுநாள் தனது சேவகனுக்கு பிறந்தநாள் ஆயிற்றே!

மறுநாள் அதிகாலையில் குரு எப்போதும்போல் சபையை திறந்து



பாபாவிற்கு செய்ய வேண்டிய சேவைகளை செய்து முடிக்கும்போது ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. குரு அவர்கள் தொடர்பு கொண்டதும் மறுமுனையில் சாய்ராம் நான் மயிலாப்பூர் சாய்பாபா கோவிலில் இருந்து பேசுகிறேன்.

என் பெயர் மோகன். நான் இப் போது உங்களைப் பார்க்க வருகிறேன். எனக்கு வழி கூறுங்கள் என்று கேட்க, குருவும் அவருக்கு வழிகூற, அடுத்த ஒரு மணிநேரத்தில் திரு. மோகன் அவர்கள் ஒரு பெரிய பையை தூக்கிக்கொண்டு நமது சபைக்கு வருகின்றார்.

வந்தவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, அவரது பையைத் திறந்து பாபாவிற்கு போர்த்திய சால்வைகள் மூன்றும், மாலை ஒன்றும், பாபா பிரசாதம் அடங்கிய பை மூன்றையும் வழங்கி இன்று உங்களுக்கு பாபாவின் பிரசாதத்தை கொடுக்க வேண்டும் என்று தோன்றியது. அதுதான் எடுத்துவந்தேன் என்றார்.

உங்களை நான் முன்பின் பார்த்ததில்லை. எனக்கு பாபாவின் பிரசாதக்களை கொடுக்க வேண்டும் என்று உங்களுக்கு எப்படித் தோன்றியது என்று குரு கேட்டார்.

கொஞ்சநாட்களுக்கு முன்பு உங்களது சேவைகளைப் பற்றி கேள்விப்பட்டேன். அன்றிலிருந்து உங்களை சந்திக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்கு இன்று தான் நேரம் கிடைத்தது என்றார் திரு. மோகன் அவர்கள்.

குருவும் அவரிடம் இன்று தனது பிறந்தநாள் என்று தெரிவித்து. இன்றைக்கு பாபாவின் பிரசாதங்களை தமக்கு அளித்தமைக்கு மனதார நன்றி தெரிவித்துக் கொண்டார். "எதைப்பிடித்தாலும் இறுக்கிப்பிடி" என்ற பாபாவின் கூற்றுப்படி வாழக் கற்றுக்கொண்டால், அவன் சாதாரண பக்தனாக இருந்தாலும் சரி அவனது வாழ்க்கை தேவைகள் எதுவானாலும் பகவான் சாயிநாதரால் உடனடியாக நிறைவேற்றப்படும் என்பது நிதர்சனமான உண்மை.

பாபாவிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமல் வாழும் சாயி சேவகர்களை சாயி ஒருபோதும் கைவிட்டதில்லை. அந்தவகையில் குரு அவர்கள் சாயியிடம் தனக்கென்று எதையும் கேட்கமாட்டார். நீங்கள் ஏன் உங்களுக்கென்று பாபாவிடம் ஏதும் கேட்க மாட்டேன் என்கிறீர்கள் என்றால், "அவர் கொடுக்கவில்லை

என்றால்தானே நாம் கேட்ட வேண்டும். அவர் கொடுத்துக்கொண்டேதான் இருக்கிறார் என்பார்.

அதே பிறந்தநாள் அன்று நடந்த இன்னுமொரு நிகழ்வு. சாயி நாதர் சற்குரு மட்டுமல்ல, அவரே கண்கண்ட தெய்வம் என்பதை நாங்கள் நன்குணர்ந்துகொண்ட தருணம் அது.

ஆம், குருவின் பிறந்தநாள் அன்று மாலையில் நாங்கள் அனைவரும் அருகில் இருக்கும் சிவாலயம் ஒன்றிற்கு சென்று விட்டு அப்படியே உணவகத்தில் சிற்றுண்டி சாப்பிட்டு வரலாம் என்று குருவிடம் வேண்டு கோள் வைக்க, முதலில் பணம் இல்லை என்று மறுத்தவர். பிறகு கோவிலுக்கு மட்டும் சென்றுவரலாம் என்ற நிபந்தனையோடு ஒத்துக்கொண்டார்.

கோவிலுக்குச் செல்ல பிரபலமான வாடகை ஆட்டோ ஒன்றை தொடர்பு கொள்கிறோம். ஆனால் அந்த ஆட்டோ ஓட்டுனர் கூடுதல் தொகை கொடுத்தால்தான் வருவேன் என்று பேரம் பேசுகிறார்.

குருவும் வேறுவழியின்றி பரவா யில்லை வாருங்கள் என்று கூற சிறிது நேரத் தில் ஆட்டோ வந்து நின்றதும் அதன் டிரைவர் இறங்கி ஓடி வந்து குருவிற்கு வணக்கம் செலுத்திவிட்டு, சாய்ராம் நீங்கள் என்று தெரியாமல் கூடுதல் தொகை கேட்டு தொந்தரவு செய்துவிட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள் என்றுகூறிவிட்டு எங்களை ஏற்றிக்கொண்டு ஆலயத்தில் இறக்கிவிட்டார்.

குரு அவர்கள் ஓட்டுனரிடம் அவர் கேட்ட தொகையை கொடுக்க, அவரோ பிடிவாதமாக பணத்தை வாங்க மறுத்துவிட்டு வண்டியை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். நடந்தவைகளை பார்த்துக் கொண்டி ருந்த நான், குருவிடம் ஓட்டுனர் உங்களுக்கு தெரிந்தவரா என்று கேட்க, அவரோ இல்லை இவரை நான் பார்த்ததே இல்லை. இவர் யார் என்றே எனக்குத் தெரியாது என்று கூறினார்.

குடும்பத்தாருடன் வெளியே செல்வதற்கு தன் சேவகன் பணம் இல்லை என்று கூறிவிட்டானல்லவா? அவனுக்காக பாபா தன் லீலையை ஆரம்பித்து விட்டதை நான் கண்ணார கண்டு ரசித்தேன். அடுத்த லீலை என்னவாக இருக்கும் என்பதை ஆர்வமாக கவனிக்க ஆரம்பித்தேன்.

நாங்கள் ஆலயத்திற்குள் சென்று தரிசனம் முடித்து, பிரகாரத்தில் சற்றுநேரம் அமர்ந்து விட்டு வெளியே வருகிறோம். எங்கள் குழந்தைகள் முகத்தில் "ஒட்டலுக்கு கிடையாதா" என்ற ஏக்கம் படர்ந்திருப்பதை கண்டும் காணாததுபோல் குருவுடன் சேர்ந்து நான் ஆலயத்திற்கு வெளியே வரவும் எங்கள் முன் ஒரு கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

காரில் இருந்து இறங்கிய ஒருவர் நேரே குருவிடம் சாய்ராம் என்னை அடையாளம் தெரிகின்றதா என்று கேட்டுவிட்டு காரில் இருந்தவர்களிடம், கீழே இறங்குங்கள் நம்ம சாய்ராம் கோவிலுக்கு வந்திருக்கிறார் பாருங்கள் என்று கூற, காரில் இருந்து அவரது மனைவி குழந்தைகள் அனைவரும் இறங்கிவந்து குருவிற்கு வணக்கம் செலுத்த, குருவிற்கும் அவர்களை ஞாபகம் வந்துவிட்டது.

பின்பு சிறிது நேரம் அவர்களிடம் உரையாடிவிட்டு, நல்லது சாய்ராம் நாங்கள் புறப்படுகிறோம் என்று குரு

கூற, அவர்களோ சாய்ராம் பாபா எங்கள் குடும்பத்திற்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார் இன்று நாங்கள் நன்றாக இருப்பதற்கு பாபாதான் காரணம்.

அதற்கு நீங்கள் செய்த உதவியை எங்களால் மறக்க முடியாது. தயவு செய்து மறுக்காமல் இன்று எங்களுடன் உணவகத்திற்கு வந்து உணவு அருந்திவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று வற்புறுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

குரு எவ்வளவோ மறுத்தும் குடும்பமே சேர்ந்து வற்புறுத்த இறுதியில் குரு ஒத்துக் கொள்ள, அந்த நண்பர் எங்களை அருகில் உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றிற்கு அழைத்துச் சென்று மிகவும் சிறப்பான உணவுவகைகளை வரவழைக்க, அனைவரும் ஆனந்தமாக உண்டு கழித்தோம். அதுமட்டுமா? நாங்கள் உணவருந்திக் கொண்டிருந்த போதே அந்த நபர் வெளியில் சென்று ஒரு கூடை நிறைய பழவகைகளை வாங்கிக்கொண்டு வந்து அதையும் எங்களுக்கு வழங்கி, அவர்களது காரிலேயே எங்களை கொண்டுவந்து வீட்டில் விட்டுச்சென்றனர்.

இவ்வாறாக தன் சேவகனுக்காக பாபா செய்த லீலையால் திக்கு முக்காடியபடி அந்த திருமணநாளும், பிறந்தநாளும் நாங்கள் மறக்க முடியாத நாளாக இன்றும் என்றும் எங்கள் மனதில் நிறக்கின்றது. சாயியின் பாதங்களை இறுக்கிப்பிடியுங்கள்! சகலமும் குறைவின்றி நிகழும்.


விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

எங்களது குரு ஸ்ரீராம் அவர்களின் "சாய் மகராஜ் குருவைதேடி" மாத இதழின் 6 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது அன்பான வாழ்த்துக்கள்.



ANMRS IT SOLUTIONS

Jains Apoorva Apartment,
Block1 Door No: Sh Sundaresan St,
Zamin Pallavaram, Chennai- 43

## சாயி பஜன்



பூமியின் ஆழத்தில் தண்ணீர் நிரம்ப இருக்கிறது. அந்த நீரை எடுக்க விரும்பினால், என்ன செய்ய வேண்டும்? உங்களுக்கும் தண்ணீருக்கும் இடையில் மண் ஒரு தடையாக இருக்கிறது. சேறும், மண்ணும் உலக விவகாரங்களைக் குறிக்கிறது. அவை அகற்றப்பட வேண்டும். சேற்றை அகற்றினால், அடியில் இருக்கும் தண்ணீர் நிச்சயமாக கிடைக்கும். இல்லையெனில் நீங்கள் ஒரு போர்வெல் போட்டால், அது இன்னும் ஆழமாகத் தோண்டி, தண்ணீரை மேற்பரப்பிற்குக் கொண்டு வரும். இறைவனின் திருநாம ஜெபம் என்பது ஆழ்துளைக் கிணற்றின் நீரை மேலே கொண்டு வருவதைப் போன்றது.

எனவே நீங்கள் உங்கள் நாவில் இறைவனின் பெயரை நடனமாடச் செய்ய வேண்டும், நீங்கள் எந்த வேலை செய்தாலும், அதைத் தெய்வீக உணர்வுடன் செய்ய வேண்டும். அப்போது வேலை வழிபாடாக மாற்றப்படும். எந்த ஒரு நல்ல செயலையும் கடவுளின் செயலாக எண்ண வேண்டும். இந்த உணர்வோடு, துடிப்பான சாயி பஜனைகளை முழுமையான பக்தியுடனும், உற்சாகத்துடனும் பாடுங்கள்.

# ஷீரடி ஸ்ரீ சாய்பாபா வாழ்க்கை வரலாறு



**சா**ய்பாபா 1854ம் ஆண்டு, தனது பதினாறாவது வயதில் ஷீரடிக்கு வருகை புரிந்தார். ஆனால் சில. தினங்களில் அவர் அங்கிருந்து கிளம்பிச் சென்றார். அவர் எங்கு சென்றார் என்பதை யாரும் அறியவில்லை.

சில ஆண்டுகன் கழிந்தன. சாந்த் பட்டேல் என்பவர் ஒருமுறை காட்டு வழியில் சென்று கொண்டிருந்தபோது, பக்கீர் போல இருந்த பாபாவை கண்டார். பாபா அவரிடம் இளைப்பா றும்படி கூறினார். அவர்கள் இருவரும் புகைபிடிக்க நெருப்பு தேவையாக இருந்தது. பாபா தன் கையிலிருந்த கத்தியால் நிலத்தை தோண்ட நெருப்பு வந்தது.

பிறகு கைத்தடியால் பூமியின் மீது அடிக்க தண்ணீர் வந்தது. மேலும் சில மாதங்களுக்கு முன் காணாமல் போன சாந்த் பட்டேலின் குதிரை இருக்கும் இடத்தையும் பாபா சரியாக கூறினார். பாபாவின் மகிமையை சாந்த் பட்டேல் புரிந்து கொண்டார்.

சாந்த் பட்டேல், பாபாவை தன் வீட்டிற்கு அழைத்து சென்றார். சில நாட்கள் தன் வீட்டிலேயே பாபா வைத் தங்க வைத்து உபசரித்தார். சாந்த் பட்டேல் தன் மைத்துனரின்

மகனது திருமண நிகழ்ச்சிக்காக ஷீரடி சென்றபோது, பாபாவையும் தன்னுடன் ஷீரடிக்கு அழைத்து சென்றார்.

பாபாவின் ஒளிபொருந்திய தோற்றத்தைக் கண்ட மகால்சாபதி என்னும் பூசாரி, அவரை சாய் என்று அழைத்தார். சாய் என்றால் பாரசீகத்தில் சுவாமி என்று பொருள்.

பாபா என்பது இந்தியில் அப்பா என்று பொருள். இரண்டும் இணைந்து சாய்பாபா என்ற திருப்பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

சாய்பாபா ஷீரடியிலேயே தங்கிவிட தீர்மானித்தார். ஷீரடியில் பழமையான மசூதி ஒன்று இருந்தது. அதன் அருகிலுள்ள வேப்ப மரத்தின் அடியில் பாபா அமர்ந்தார். பாபா அமர்ந்திருந்த வேப்பமரத்தின் இலைகளில் அதன் இயல்பான கசப்புச்சுவை மாறியது.

ஷீரடி மக்கள் பாபாவிடம் நீங்கள் யார்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், "நானே அல்லா! நானே சங்கரன்! நானே ஸ்ரீகிருஷ்ணன் ! நானே அனுமன்" என்று கூறினார். ஆமாம்! அவர் இப்பூமியில் இறைஅம்சம் கொண்டவராகவே அவதரித்தார்!

சுமார் 12 ஆண்டுகள் தவ வாழ்க்கை மேற்கொண்டு யோகியைப் போல் வாழ்ந்தார் பாபா. அவரது தெய்வீகத் தன்மையை உணர்ந்தவர்கள் அவர் ஒரு மஹான் என்று போற்றினார்கள்.

பாபாவின் அருளாலும் கருணையாலும் சீடர்கள் பலர் உருவானார்கள். அப்படி பாபா குருவாக உருவாகி குருவருள் பெற்று ஷீரடியில் வாழ்ந்து வந்தார்.

பல ஆண்டுகள் ஒரு யோகியைப் போலவே வாழ்ந்த பாபா பிச்சை எடுத்தே சாப்பிட்டார். தனது மகிமையால் நோயுற்றவர்களின் நோயை குணமாக்கினார். பாபாவின் புகழ் சுற்றுவட்டாரங்களில் பரவத் தொடங்கியது. பல ஞானிகள் வந்து பாபாவைச் சந்தித்தனர். அவர்கள் பாபாவின் தெய்வீகத் தன்மையை தாங்கள் அறிந்ததோடு அதை உலகிற்கும் எடுத்து கூறினார்.

பாபா தான் தங்கியிருந்த துவாரகாமாயீ என்னும் மசூதியில் விளக்குகள் ஏற்றி வைப்பார். இரு எண்ணெய் வியாபாரிகள் எண்ணெய் கொடுத்து வந்தனர்.

ஒருநாள் பாபாவின் ஆற்றலை சோதிக்க எண்ணிய அவர்கள் எண்ணெய் தர மறுத்தனர். பாபா தண்ணீரை ஊற்றி விளக்குகள் எரித்தார். இந்நிகழ்ச்சியால் பாபாவின் புகழ் அப்பகுதி முழுவதும் பரவியது. பாபாவைத் தேடி பக்தர்கள் வரத் தொடங்கினர்.

ராதாகிருஷ்ணமாயி என்னும் பெண்மணி பாபாவின் இருப்பிடத்தை கவனித்துக்கொண்டதோடு, உணவும் சமைத்து வந்தார். பாபாவைத் தேடி எத்தனை பக்தர்கள் வந்தாலும் அவர்கள் அனைவரும் வயிறார உண்ணும்படி அந்த உணவை பெருகச் செய்தார் பாபா.

தெய்வீக மகிமை நிறைந்த பாபா குழந்தைகளிடம் குழந்தையாகவே நடந்து கொண்டார். சிரிக்கச் சிரிக்கப் பேசி குழந்தைகளை மகிழச் செய்தார்.

பாபா பஜனையையும், பாடல்களையும் விரும்பினார். பக்தர்களிடம் பஜனைகளையும், பாடல்களையும் பாடும் படி உற்சாகமூட்டினார். சில வேளைகளில் பாடல்களுக்கு தக்கபடி பாபா நடனமாடினார்.

ஏழைகளின் துயரங்களை கண்டு



மனம் பொறுக்காதவர் பாபா. ஒரு தாயைப்போல ஏழைகளிடம் நடந்து கொண்டார். தொழு நோயாளி கள் மீது அவர் மிகுந்த இரக்கம் கொண் டிருந்தார். அவர்களது உடலிலுள்ள புண்களை தன் கையாலேயே கழுவி அவர்களுக்கு மருத்துவம் செய்தார். பாபா சாஸ்திரங்களையும் ஐயமறக் கற்று உணர்ந்திருந்தார்.

பகவத் கீதை, குர்ஆன் போன்றவற் றின் சுலோகங்களுக்கு மிக அற்புத மான விளக்கங்கள் அளித்து பண்டிதர் களைக்கூட வியப்படையத் செய்தார். பாபா மதங்களைக் கடந்து நின்றார். துவாரகாமாயீ மசூதியில் பாபா வீற்றிருந்தார். மக்கள் அவரை சாய் மஹராஜ் என்று போற்றி கொண்டா டினார். பாபா மக்களுக்கு கூறிய பொதுவான உபதேசம் நிஷ்டா (நம்பிக்கை)வும் ஸபூரி (பொறுமை)யும் ஆகும். தன்னை நாடி வந்த நோயாளிக ளுக்கெல்லாம் 'உதி'(சாம்பல் விபூதி) யையே பிரசாதமாகத் தந்து, அவர்களின் நோய்களை நீக்கியவர் பாபா.

பாபாவிடம் எல்லா மதத்தினரும் பணிந்து நலம் பெற்றனர். அவர்களிடம் ஒருபோதும் மத, இனப் பிரிவுகளை பார்த்து பாபா ஆசியளிக்கவில்லை. அனைவரையும் ஒன்றாகவே பார்த்தார். தன்னையே இஸ்லாமியனாகவோ, இந்துவாகவோ அவர் காட்டிக் கொள்ளவோ, அதைப்பற்றி பேசவோ இல்லை. இன்னும் சொல்லப்போனால் தன்னுடைய பிறந்த இனத்தையோ, தன் தாய் தந்தையரைப் பற்றியோ அவர் யாரிடமும் எதையும் வெளிப்படுத்தவில்லை.

வாழ்வில் பொறுமையும், தன்மீது நம்பிக்கையும் கொண்ட அன்பர்களுக்கு அவர் எப்போதும் துணை நிற்கிறார். துவாரகாமாயீயில் அன்று பாபாவால் மூட்டப்பட்ட நெருப்பு இன்றும் அணையாமல் இருக்கிறது.

அந்நெருப்பு குண்டத்திலிருந்து எடுக்கப்படும் உதியே இன்றும் பக்தர்களின் பிரசாதமாக விளங்குகிறது.

பாபா தன் பொன்னுடலோடு இப்பூவுலகில் வாழ்ந்த காலத்தில் எண்ணிலடங்காத அற்புதங்கள் புரிந்தார். அவர் 1918ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ம் நாள் தன் ஸ்தூல உடலை பிரிந்தார். உதி அளித்து, உபதேசம் செய்து, பல்லா யிரக்கணக்கான மக்களுக்கு அருள்புரிந்த பாபா, தான் கூறியபடியே தன் ஸ்தூல் உடல் மறைந்த பின்னும் இன்றும் அருள்

புரிந்து வருகிறார்.

அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்கும், பாவங்கள் நீங்கப் பெற்றவர்களுக்கும் ஷீரடிபாபாவை வழிபடும் பேறு கிடைக்கிறது. உலகம் முழுவதும் இருந்து மக்கள் கூட்டம் சாயிபாபா இருக்கும் இடம் நோக்கி வருகிறார்கள். ஷீரடி மண்ணை மிதித்த வர்களின் கஷ்டங்கள் விலகுகிறது.

அவர்களது மனக்கவலைகள் மறை கின்றன. அவர்கள் குடும்பங்களில் மகிழ்ச்சி பெருகுகிறது. ஆனந்தம் பொங்குகிறது. இன்றும் லட்சோப லட்சம் குடும்பங்களில் ஷீரடி பாபா ஆனந்தத்தை பொங்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

கலியுகத்தில் கேட்டவருக்கு கேட்ட வரத்தை உடனே அளிக்கும் வள்ளலாகத் திகழும் ஷீரடி பாபாவை ஒரு முறை நினைத்தாலே போதும், ஒன்பது தலைமுறையில் செய்த பாவங்கள் தீரும். ஷீரடி நோக்கி ஓரடி வைத்தாலே உங்கள் உள்ளத்தில் உள்ள துயரங்கள் யாவும் தூசியாகப் பறக்கும்.

இன்று இந்தியாவில் பாபாவுக்கு லட்சக்கணக்கான இடங்களில் ஆல யங்கள் உள்ளன. உலகில், 50 நாடுகளில் சாய் ஆலயங்கள் எழுப்பப்பட்டுள்ளதே, அவர் வற்றாத அருளமுத வள்ளல் என்பதும் கலியுகத்தின் கண்கண்ட கடவுள் என்பதையும் உணர்த்தும்.

***எல்லாம் சாயி!***
***எல்லாமே சாயி!***


**குரு ஸ்ரீராம் அவர்களின் "சாய் மகராஜ் குருவை தேடி" இதழின் 6 ஆம் ஆண்டு துவக்க விழாவிற்கு எங்களது மனமார்ந்த வாழத்துக்கள்!**

**TRUE LINK HR**

**Management Solution**



**Corporate staffing/ temporary staffing/ payroll management/ training & development/ compliance consuline/ security service/ construction/ real estate & interior work.**

**No: 7, Second Floor,**
**Thiru Vi Ka Street, Pallavaram,**
**Chennai- 43. Hasmithahrhomes.com**
**Hrfotruelink@Gmail.com**


# சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

**சித்தர்களின் சீவசமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது சாச்சு என்கிற பிரம்மஶ்ரீ சதாசிவ சாஸ்திரிகளின் வரலாற்றை. வாருங்கள் அவரின்ஆசியைப் பெறுவோம்.**

## பிரம்மஶ்ரீ சதாசிவ சாஸ்திரி



**சா**ச்சு என்பது சுவாமிகளின் செல்லப் பெயர். ஆனால், அவருக்கு இன்னொரு பெயரும் உண்டு. அது 'சிவன் சார்'! தஞ்சை மாவட்டம் திருவையாறு அருகே உள்ள ஈச்சங்குடியில் புரட்டாசி மாதம் 18 ந்தேதி 3.10.1904 திங்கள்கிழமை அன்று ஶ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கும், ஶ்ரீ மகாலட்சுமி அம்மாளுக்கும் பிறந்தார்.

கும்பகோணம் டவுன் ஹைஸ் கூலில் கல்வி, பதினோராம் வகுப்பு முடிந்ததும் அய்யன் தெருவில் கலை கைவினைக் கல்விப் பள்ளியில், சித்திரப் பயிற்சி எடுத்துக் கொண்டார். புகைப்படக் கலையில் திறன் கொண்டார் கும்பகோணத்தில், 'சிவன் ஆர்ட்ஸ் அண்ட் ஃபோட்டோ ஸ்டூடியோ'வை நிறுவினார்.

சுவாமிகளுக்கு மண வாழ்வில் விருப்பமில்லை. எனினும், குடும்பத்தாரின் விருப்பத்துக்கு இணங்க திருவண்ணா மலை கடலாடியில் பிறந்த பார்வதம் அம்மாளை மணமுடித்தார் ஒருகட்டத்தில், அனைத்தையும் துறந்து, தனிமையை நாடினார்.

காஞ்சி மகாபெரியவாளின் அபூர்வமான பல படங்களை எடுத்தவர், சாச்சுதான்! கும்பகோணம் டபீர் படித் துறையில், மகாபெரியவா காவிரியில் குளித்துவிட்டு, அமர்ந்திருக்க,

பின்னே சுமார் நூறு பேர் படிகளில் சுற்றி நிற்பார்கள். இந்தப் படத்தை எடுப்பதற்கு மகா பெரியவா உத்தரவிட, உடனே சிவன் சார், காவிரியில் இறங்கி நின்றுகொண்டு, அதனை அப்படியே படமெடுத்தார்! பிறகு, இதுபற்றிக் குறிப்பிடும்போது, "பெரியவா எனக்கு வைத்த டெஸ்ட் இது" என்பார், சிவன் சார்! சிதம்பரம் கோயிலை, அதன் 4 கோபுரங்களும் தெரியும்படி புகைப்படம் எடுத்து அசத்தியதும் அவர்தான்.

ஒருகட்டத்தில், போட்டோ ஸ்டூடியோவை, தன் மீது மிகப்பெரிய பக்தி கொண்டிருந்த வெங்டேஸ்வரா ஸ்டூடியோ பெரிய சாமியிடம் ஒப்படைத்தார். 'கேன்வாஸ் போர்ட்ரைட்' வரைவதில் தேர்ந்தவர் சிவன் சார். இவர் வரைந்த மகாபெரியவாளின் படம், முடிகொண்டான் வாஞ்சிநாதன் என்பவரது வீட்டில் உள்ளது.

நல்லி செட்டியார் சிவன் சாரின் பரமபக்தர். நாதன்ஸ் கஃபே நாதன், அமெரிக்க நண்பர் ஒருவருடன் சிவன் சாரை சந்திக்கச் சென்றார். அவரை நமஸ்கரித்தவர், பெரிய தொகைக்கு செக் ஒன்றை சமர்ப்பித்தார். அப்போது, தான் உடுத்தியிருந்த துண்டைக் காண்பித்து, "இதுவே எனக்குப் பாரமாக உள்ளது. வேறு பாரம் தேவையா?" என்று மறுத்துவிட்டார்.

காலப் போக்கில் நடந்த மாறுதல்கள், மக்களின் நாகரிக மோகம், பண்பாடு கலாசார மாற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து,சிவன் சார் எழுதிய கருத்துக் களஞ்சியமே, 'ஏணிப்படிகளில் மாந்தர்கள்' எனும் புத்தகம்.

இந்தப் புத்தகத்துக்கு அட்டைப்படம் வரைந்தவர் ஓவியர் மணியம்செல்வன். அவர், படம் வரைந்தபோது சிறு திருத்தம் சொன்னார் சிவன் சார். "அந்தச் சிறு திருத்தம் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. படம் சாந்நித்தியத்துடன்



திகழ்ந்தது" என்ற சிலாகிக்கிறார் ஓவியர் மணியம்செல்வன். 'எங்களுக்குக் கிடைத்த பெரும் பேறாக, சிவன் சாரின் இந்த நூலைப் பதிப்பிக்கும் வாய்ப்பு கிட்டியது' என்பார் நர்மதா பதிப்பகம் ராமலிங்கம்.

ஓர் அவதாரப் புருஷர் ஜீவன் முக்தர் எந்த நிலையில் இருப்பார்?இதற்கு, தனது புத்தகத்தில் சிவன் சார் தரும் பதில்.

ஆன்மிகத்தில் ஓர் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள், கீர்த்தியைக் கொண்டிருக்க வேண்டுமென்ற நியாயம் கிடையாது. எவனொருவன் பதவி, ஸ்தாபனம், காணிக்கை போன்ற அனைத்தையும் துறந்து தனித்து இயங்குகிறானோ, அவனே வைராக்கியம் உள்ளவன்.'

அன்பர் ஒருவருக்கு மனக் கஷ்டம். சிவன் சாரிடம் சென்று அனைத்தையும் கொட்டித் தீர்த்து ஆறுதல் பெறுவது என்ற முடிவுடன் சென்றார். அங்கே, வாசல் கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளேயிருந்து

சிவன் சாரின் பேச்சுக்குரல் கேட்டது. 'எல்லாத்தையும் எல்லார்கிட்டேயும் சொல்லணும்கிறது இல்லே. என்கிட்டேகூட சொல்ல வேண்டாம். எல்லாம் தானே சரியாகிவிடும்.'

சிறிது நேரம் காத்திருந்தும் எவரும் வெளியே வராததால், கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்ற அந்த அன்பருக்கு ஆச்சரியம்! காரணம், அங்கே சிவன் சாரைத் தவிர வேறு எவரும் இல்லை! பிறகுதான் அன்பருக்குப் புரிந்தது அவை, தனக்காகவே சொல்லப்பட்ட வார்த்தைகள் என்று! சிவன் சாரைத் தரிசித்து, மன அமைதி பெற்றார் அன்பர். மகான்களிடம் தனது குறைகளைச் சொல்லித்தான் பரிகாரம் தேடவேண்டும் என்பதில்லை.அவர்களின் சந்நிதியை நோக்கி நடக்கத் தொடங்கினாலே, ஊழ்வினைகள் அலறி ஓடிவிடும்.

'ஆங்கரை பெரியவா எனும் ஸ்ரீகோவிந்த தாமோதர சுவாமிகள்' என்ற சந்நியாச நாமம் கொண்ட திருவல்லிக்கேணி பாகவத பெரியவர் ஒருவர், சிவன் சார் மீது அபரிமிதமான பக்தி கொண்டவர்.

ஆங்கரை சுவாமிகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை ஆகியிருந்தது. பிறகு கைகால் செயலற்றுப் போனது. பேச்சும் தடைப்பட்டது. இதனால் மனம் வருந்திய அன்பர்கள், சிவன் சாரின் நாற்காலிக்கு அருகில் சுவாமிகளை உட்கார வைத்தனர். சிவன் சாரின் கால் கட்டை விரல், சுவாமிகள் மீது பட்டபடி இருந்தது. சுவாமிகள் தும்பைப்பூவை சிவன் சாரின் பாதங்களில் சமர்ப்பித்தார். சிறிது காலத்திலேயே எழுந்து நன்கு நடந்து, பழையபடி உபந்யாசமும் செய்ய ஆரம்பித்தார் ஆங்கரை சுவாமிகள்!

ஒருமுறை, 'திருவெண்காடு போ' என்ற சிவன் சாருக்கு உத்தரவிட்டார் மகாபெரியவா. அதுமுதல் தொடர்ந்து



திருவெண்காடு செல்லலானார் சிவன் சார். திருவெண்காடு புனிதம் வாய்ந்தது. காசியைப் போன்றே, இந்தத் தலத்தின் காவிரி ஸ்நான கட்டத்துக்கு மணிகர்ணிகை என்றே பெயர்.

சிவன் சாரின் ஜோதிட மேதாவிலாசமும் வானியல் சாஸ்திர அறிவும், கணிதப் புலமையும் வியக்கவைக்கும். வேத வித்தான ஸ்ரீவிஜயபானு கன பாடிகள் கண்ட காட்சி இது. சிவன் சார், கைப்பிடி நெல்லை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு ஒருவித ஒலியெழுப்பிக் கூவ, குருவிகள் வந்து, அவரது கையில் அமர்ந்து நெல்லைச் சாப்பிடுமாம்! இதை, மகாபெரியவாளிடம் கனபாடிகள் சொன்னதும், "சாச்சுவுக்கு மூணு பாஷை தெரியும். உனக்குத்

தெரியுமோ?" என்றாராம் மகாபெரியவா. அதாவது, மனிதர்கள், மிருகங்கள் மற்றும் பட்சிகளின் பாஷையை அறிந்தவர் சிவன் சார்!

அது 1994 ஆம் வருடம். ஜனவரி 8 ஆம் நாள் அதிகாலை. நிஷ்டையில் இருந்த சிவன் சார், 'ஒரு மகாபுருஷரை உலகம் இழக்கிறது' என்றார். பிற்பகல், நடனக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் வீட்டுக்கு வந்தவர், அப்படியே சிலையாக அமர்ந்திருந்தார். மூன்று மணி அடிக்க ஒரிரு நிமிடங்கள் இருக்கும்போது, சகஜ நிலைக்குத் திரும்பி, 'எல்லாம் ஆயிடுத்து கிளம்பலாம்' என்றார்! சரியாக 2:58 க்கு, மகா பெரியவா ஸித்தி அடைந்தார் என்ற செய்தி வந்தது!

கலைஞனாகவும், பலரும் போற்றிய மகானாகவும், ஞானியாகவும், தீர்க்க தரிசியாகவும் திகழ்ந்த, அந்த சாச்சு என்கிற "சிவன் சார்" யார் தெரியுமா? காஞ்சி மகா பெரியவாளின் இளைய சகோதரர்தான்.

சுவாமிகள் தன் ஆயுள் முழுவதும் தனது அன்பர்கள் வீட்டிலேயே தங்கியிருந்தார் இறுதியாக நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களின் வீட்டில் தங்கி இருந்தபோது 7.3.1996 ஆம் ஆண்டு சித்தியடைந்தார்கள். அவர்களது சீடர்கள் கந்தன் சாவடியில் பீடம் அமைத்து வழிபட்டுவருகின்றார்கள்.

**<u>முகவரி:</u> ஸ்ரீ சிவன் சார் ஆலயம், சிவப்பிரகாசம் டிரஸ்ட், விஜயசாந்தி அப்பார்ட்மெண்ட், ஜெயேந்திர காலணி, எஸ்.எப்.1, E பிளாக், ராஜீவ் காந்தி சாலை, கந்தன்சாவடி, சென்னை 96. போன்: 9600015230.**


எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

**சித்தர்களின் சீவ சமாதியை வழிபடுவோம்!**

**நம் கர்மவினையின் வீரியத்தை குறைத்துக் கொள்வோம்!!**

**சீத்தர்களைப்பற்றி அறிந்து கொள்ள;**
**WWW.SIDHDHARS.COM**

தமிழ்நாட்டில் சேவை மனப்பான்மையுடன், சித்தர்கள் பிரபஞ்சம், சித்தர் ஜீவன், ஜி.எஸ். டிராவல்ஸ், சித்தர்ஸ்.காம் இணைந்து நடத்தும் இருசக்ர வாகன ஆன்மீகப் பயணக் குழுவில், சித்தர்கள், மகான்களின் ஜீவசமாதி யாத்திரை மாதந்தோறும் வரும் பவுர்ணமியை ஒட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். ஆன்மீகப் பயணத்தில் கலந்து கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன்,

**இருசக்கர வாகன யாத்திரை நிர்வாகிகள்,**
**சித்தர்கள் பிரபஞ்சம்,**
**கோ.சுப்பிரமணி, கா. முத்துக்குமார்.**
**9941009897.**

**சித்தர் ஜீவன் சு. வெங்கடேசன் 9941782523**

**ஜி.எஸ். டிராவல்ஸ்**
**ரா.சுரேஷ். 8939111089.**

**சித்தர்கள்.காம்**
**முத்து மகேஸ்வரன், மோனிகா முத்து மகேஸ்வரன். 9840411176.**



6ஆம் ஆண்டு துவக்கவிழா காணும் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழுக்கு எங்களது குடும்பத்தின் சார்பாக மனப்பூர்வமான வாழ்த்துக்கள். சாயிபாபாவின் ஆசியோடும் வாழ்த்துக்களோடும் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு சாயி சேவையில் சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.

அன்புடன்,

சாயி அடிமை, திருமதி.ஜெயந்தி முரளி
சைதாப்பேட்டை, சென்னை.



**6 ஆம் ஆண்டு துவக்கவிழா காணும் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழுக்கு எங்களது இதயப்பூர்வமான வாழ்த்துக்கள். சாயி பாபாவின் அருளோடும், ஆசியோடும் ஆண்டுகள் பல தாண்டி, சாதனைகள் பல புரிய வாழ்த்துகிறோம்.**

அன்புடன்,

**வெங்கடேஷ் குடும்பத்தார்,**
கோயம்பேடு. சென்னை.

# அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

**S.Jayanthy, INDIAN BANK**

**AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056**

**(Purasaiwakkam Branch) Chennai**

**Gpay: 6385129372**

# இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திரு.இராஜகோபால்.பெங்களூர். ரூ.1000.

திருமதி.ரேகா குடும்பத்தார். அயனாவரம். ரூ.1500.

திருமதி. மாதங்கி பாலாஜி. கீழ்பாக்கம். ரூ. 1000.

திரு.அதிர்ஷ்ட லட்சுமி குடும்பத்தார். விழுப்புரம். ரூ.1000.

திரு.வர்ஷிகா சுபப்பிரபா. மதுரை. ரூ.1000

திரு. என் சுந்தரமணிகண்டன். திருமுல்லைவாயல்.ரூ.1000.

திரு. துவாரகன். மதுரை. ரூ.1000.

திருமதி.சாந்தி. மந்தைவெளி.ரூ.500.

திருமதி.சுகன்யா மகேஷ்பிரபு. சென்னை. ரூ.500.

திரு.சாய்குமார் நேத்ரா குடும்பத்தார். அயனாவரம். ரூ.500.

திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.

திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திரு.இராமசுவாமி.டி.நகர். ரூ.500
திருமதி.வித்யா மாதவன்.டி.நகர்.ரூ.500
திருமதி சரண்யா கொளத்தூர். ரூ.500
திருமதி.இந்துமதி.அயனாவரம்.ரூ.500.
திருமதி. ரமா குடும்பத்தார். அயனாவரம். ரூ.500.
திரு.கோபாலகிருஷ்ணன் கமலக்கண்ணன். வேப்பம்பட்டு.ரூ.500
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திருமதி.சுமதி வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500.
திரு.ஈஸ்வர். ஈரோடு. ரூ.500.
திருமதி.ஜானகி கண்ணன். அயனாவரம்.ரூ.500.
திரு. பி.ஜி. மாதவி. கிண்டி. ரூ.500
திருமதி.சாந்தி நாகமூர்த்தி.கிசீரி.ரூ. 500
திரு.மீரா வெங்கடேசன். மேற்கு மாம்பலம். ரூ.501
திருமதி. பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திரு.கார்த்திகேயன் குடும்பத்தார். கதிர்.ரூ.300.
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.300
செல்வி.சாய்சிநேகா. சென்னை நகர். ரூ.200.
திரு.மதன் குடும்பத்தார். அயனாவரம்.ரூ. 201.
திரு.சி.ஆர். பாலகிருஷ்ணன். கோவை.ரூ.200.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200..
திரு.கே.ராமமூர்த்தி.லி.மி.சி ஏஜெண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி.நித்யஸ்ரீ பாலமுருகன். AYK ரூ.200
திருமதி.ஹேமா வைத்தியநாதன். சென்னை. ரூ. 200.
திருமதி.சாந்தா அம்மா. மூலக்கடை. ரூ.150.
திரு.சாய் கலையரசன். வேளாங்கண்ணி. ரூ.100.
திருமதி. ஜெயலட்சுமி குடும்பத்தார். அயனாவரம். ரூ.101.
திருமதி.பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100.
ஸ்ரீ கணேஷ் கபே. வில்லிவாக்கம். ரூ.100.
திரு.இராஜசேகர்.கொளத்தூர்.ரூ.100
சிவா அரிசிகடை. பெரியார் நகர்.ரூ.100
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
திருமதி.உமா முருகன் சின்னாளபட்டி ரூ.100
திரு. வி.பி.ஏ.ராம்குமார். ரூ.100
திரு.ராமகிருஷ்ணன்.கொளத்தூர். ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 25 கி.

**என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.**

# சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

## ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

## புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு.மோகன்ராஜ். சாக்கோட்டை.ரூ.1000.
திரு.ராமலிங்கம். சிவகாசி.ரூ.500.
திரு.கார்த்திகேயன் குடும்பத்தார். கதிர்.ரூ.300.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.







எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.

போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு




## அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

## குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.





தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

9941816692,
8825831068.

## தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!




* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

## சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்




100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்




## அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

## அமிர்தா வேலம்பட்டை பல்பொடி




பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068